# தொழுகையில் கையூன்றல்

M.Z.M. அமீனுத்தீன் இபுனு ஸாஹிர்
(ரஷாதி - மழாஹிரி)

வெளியீடு:
ஜாமிஅதுல் பாரி அறபுக் கல்லூரி
வெலிகாமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

هدية من المؤلف إلى العلامة عبد الله (شيخ الفلاح) — دامت بركاته .
١٤٢٨-٥-١٠ هـ

# தொழுகையில் கையுயர்த்தல்


M.Z.M. அமீனுத்தீன் இபுனு ஸுாஹிர்
(றஷாதி – மழாஹிரி.)



வெளியீடு :
ஜாமிஅதுல்பாரி அறபுக்கல்லூரி.
வெலிகாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாசிரியர் பெயர் : **M.Z.M.** அமீனுத்தீன் இபுனு ஸணாஹிர் (றஷாதி - மழாஹிரி.)

நூலின் பெயர் : தொழுகையில் கையூன்றல்.

பதிப்பு : முதல் பதிப்பு : 2006. 09. 20

பிரதியின் எண்ணிக்கை : 1500

அச்சகம் : ஸகீ ப்ரின்ட்
யெஹியா ரோட், மாத்தறை

جميع الحقوق محفوظة

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கையின் ஜம்இய்யதுல் உலமா பத்வாக் குழுவின் மிகமுக்கிய ஆலிம்களில் ஒருவரும், மத்ரஸதுற் றஷாத் அறபுக் கல்லூரியின் உபஅதிபருமான சங்கைபொருந்திய எனது உஸ்தாத் அஷ்ஷெய்க் S.H.M. அபுல் ஹஸன் (மதனீ) அவர்கள் மனமுவந் தளித்த சிறப்பு மிகு:**

## மதிப்புரை.

بسم الله الرحمن الرحيم وبه نستعين.

ஹதீஸ் என்பது ஞானக்கடலாக அருளப்பட்ட திருக்குர்ஆனின் தெளிவுரை என்பதால், ஹதீஸ் என்ற கலையை முறையாக அறிந்து சரியாகப் புரிந்து கொள்வதற்கு, ஹதீஸ் ஆசிரியர்கள் அடிப்படை சட்டங்களை வகுத்து உஸூலுல் ஹதீஸ் (أصول الحديث) என்ற ஒரு கலையையே தோற்று வித்துள்ளார்கள், எனவே குர்ஆன் ஹதீஸிலி ருந்து சட்டங்களை ஆராய்ந்து எடுப்பது என்பது இஜ்திஹாத் (الاجتهاد) என்ற அந்தஸ்தை அடைந்தவர்களைத் தவிர மற்றவர்களால் சாத்திய மாகக் கூடிய விஷயமன்று.

ஒருவருக்கு குர்ஆனில் மேலெழுந்தவாரியான பொருள் தெரிந் தால்மட்டும் சட்டங்களை ஆராய்ந்தெடுக்கும் ஆற்றல் உண்டாகி விடாது. இது பற்றி அழ்ழாஹ் கூறுவதாவது: (பயம் அல்லது பாது காப்பு சம்பந்தப்பட்ட ஏதாவது ஒரு விசயம் அவர்களிடம் வருமே யாகில், அதை அவர்கள் பிரபல்யமாக்கி விடுகிறார்கள், (அவ்வாறின்றி) அவ்விஷயத்தை அல்லாஹ்வுடைய றஸூல் மற்றும் (அவர்களின் மார்க்க சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைக் கவனிக்கக் கூடிய) அறிஞர்களிடம் ஒப்படைத்து விடுவார்களானால், அதை ஆராய்ந்து முடிவு செய்யக் கூடிய அவர்கள், அதை அறிந்து கொள்வார்கள்) . அல் குர்ஆன் : (4:83)

ஆதலால் இந்நூலின் ஆசிரியர் அமீனுத்தீன் (றஷாதி) உஸூல் ஹதீஸ் கலையில் தேர்ச்சிபெற்றவர். அவர் இங்கே நபி ﷺ அவர்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளின் நடைமுறையைத் தெளிவுபடுத்தப் பல ஆதாரங்களைக் காட்டி உள்ளார்.

அவரது இம்முயற்சியை அல்லாஹ் ஏற்றுக் கொள்வதுடன், நாமும் நபியுடைய சுன்னத்துக்களை மதித்து செயற்படுவதற்கு அருள் புரிவானாகவும். ஆமீன்.

இவ்வண்ணம்.

அஷ்ஷெய்க் **S.H.M.** அபுல் ஹஸன் (மதனீ)

16-12-2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கையின் ஜம்இய்யதுல் உலமா பத்வாக் குழுவின் மிகமுக்கிய ஆலிம்களில் ஒருவரும், குல்லிய்யதுல் ஹஸனிய்யா அறபுக் கல்லூரியின் அதிபருமான அன்புக்குரிய அல் உஸ்தாத் : A.L.M. ரிழா (மக்தூமி,ஹஸனீ. B.A.) அவர்கள் மனமுவந்தளித்த சிறப்பு மிகு:**

## அணிந்துரை.

இன்று முழு முஸ்லிம் உலகம் யூத, கிறிஸ்தவர்களால் பல நிந்தனைகளுக்கு ஆட்பட்டிருக்கும் இத்தருணத்தில் வயிற்றுப் பிழைப் புக்காக பலரும், கொள்கைக் குருட்டுத்தனத்திற்காக சிலரும் மார்க் கத்தில் உள்ள சில்லறைப் பிரச்சினைகளை அடிப்படைப் பிரச்சி னைகளாக்கி முஸ்லிம்களுக்கு மத்தியில் பிளவேற்படுத்திக் குளிர் காய்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய விஷேச பரகத் என்னவென்றால், குடும்பம், வீடு, சபைகளில் எதிலாவது இவர்களின் புனித கால்கள் நுழைந்து விட்டால் அந்தக் குடும்பம், வீடு, சபை, ஊர் அனைத்துமே பலகூறுகளாகப் பிரிந்து பிரச்சினைகளின் மொத்த வடிவங்களாக மாறிவிடும்.

இந்த - ஃபுறூஃ (فروع) - சிறிய பிரச்சினைகளில் ஒன்றுதான், இரண்டாம் ஸுஜூதிலிருந்து எழும்போது இடையில் இஸ்திராஹத் துடைய இருப்பிலிருந்து மேலே எழும்பும் நேரத்தில் கைவிரல்களை வைக்கும் முறை பற்றியது. உள்ளங்கைகளில் ஊன்றி எழுவதே நபி வழியாகும். விரல்களை மடிக்காது அதன் பின்புறத்தில் ஊன்றி எழும் முறை (بدعة) பித்அத்தாகும். விரல்களை மடித்துப் பொத்தி ஊன்றி எழும்புவது சம்பந்தமாக வந்த ஹதீஸும் பலவீனமாகும்.

இது சம்பந்தமாக எழுதப்பட்ட இந்நூலை முழுமையாக வாசித் தேன். ஆழமான அறபு விளக்கமின்மையாலும், பலவீனமான ஹதீஸ் களாலுமே இப்படியொரு நவீன சட்டம் வானளாவ உயர்த்தப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை அக்குவேறு, ஆணிவேறாக எடுத்துக்காட்டி யுள்ளார் நூலின் ஆசிரியரான அன்புக்கும் மதிப்புக்கும் உரிய சகோதரர் உஸ்தாத் அமீனுத்தீன் ரஷாதீ அவர்கள். ஹதீஸ் திறனாய்வுக் கலையில் அவருக்கிருக்கின்ற பிடிப்பும் ஆழமும் இந்நூலின் மூலம் அறியப்படு கின்றது.

வஹ்ஹாபிகளின் கொக்கரிப்புக்கு யாரும் அஞ்சத் தேவையில் லை. அணையும் மின்விளக்கு எப்படித்திடீரென பெரும் ஒளியைப் பாய்ச்சுமோ அதேபோன்றுதான் இவர்களது நிலையும். நெஞ்சை நிமிர்த்திக் கூக்குரலிடுவார்கள். நாங்களும் குனிந்து பதுங்காமல் துள்ளி எழுந்தால் தானாக அடங்கிவிடுவார்கள். இதுதான் யதார்த்தம். வஹ்ஹாபிஸம் உலகெங்கும், குறிப்பாக அதன் தாயகமான ஸவூதி அரேபியாவில் கூட தேய்ந்து வருகின்ற நிலையில் வயிற்றுப் பிழைப் புக்காக இதனை வளர்க்கப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

வஹ்ஹாபிஸப் பிரச்சினையை இமாம்களுக்கு மத்தியில் ஏற்பட்ட கருத்து வேற்றுமை போன்று சித்தரிக்க சிலர் முனைவது, அவர்களது வங்கரோத்துத் தன்மையையே காட்டுகின்றது. வஹ்ஹாபி கள் தமது கருத்துக்களுக்கு மாற்றமானவைகளை பித்அத் என்றே கருதுகிறார்கள். இந்நூலில் உள்ள விடயத்திலும் இதே போக்குதான். அதாவது தமது கருத்துக்களுக்கு மாற்றமானவர்களை "பித்அத்" காரர்கள் என்றும் வழிகேடர்கள் என்றும் பிதற்றுவார்கள். எம்முடன் கதைக்கும் போது மட்டும் இவை சின்னப் பிரச்சினைகள் என்று சமாதானப் பிரியர்கள் ஆகிவிடுவார்கள். இது அவர்களது அமெரிக்கா, அவர்களுக்குக் கற்றுக் கொடுத்த சமாதானப் பாடமாகும்! (عقيلة)


அகீதாவிலும் (فروع) ஃபுறூஇலும் பல மோசமான பித்அத்துக் களை

தம்முள் கொண்டிருக்கும் இவர்கள் எம்மை நோக்கி பித்அத் கணைகளை எறிவதுதான் வேடிக்கையாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த பித்அத்துக்காரர்களை எதிர்க்கப்பயந்து கொண்டிருக்கும் பலருக்கு மத்தியில் வீறு கொண்ட சிங்கமாக முன்வந்திருக்கும் சகோதரர் மௌலவி அமீனுத்தீன் அவர்கள் மேலும் பல படைப்புகளைத் தரவேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன். இந்த முயற்சியை அழ்ழாஹ் கபூல் செய்து சுவனபதியையே இவருக்கு வழங்குமாறு அவனிடமே வேண்டி நிற்கின்றேன். ஆமீன் !!!

இப்படிக்கு.
அஷ்ஷெய்க் **A.L.M.**ரிழா மக்தூமீ **(B.A)**
2005–11–17.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கையின் ஜம்இய்யதுல் உலமா பத்வாக் குழுவின் மிகமுக்கிய ஆலிம்களில் ஒருவரும், மத்ரஸதுற் றஷாத் அறபுக் கல்லூரியில் தௌரதுல் ஹதீஸ் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளருமான மதிப்பிற்குரிய எனது உஸ்தாத்: M.T.M. ஸல்மான் (தப்லீகி, பின்னூரி) அவர்கள் மனமுவந்தளித்த சிறப்பு மிகு:**

## சிறப்புரை.

மானிடர்களின் நேர்வழிக்காக அல்லாஹ் குர்ஆனை இறக்கி வைத்தான். அதற்கு விளக்கவுரையாக ஹதீஸையும் கொடுத்தான். அவ்விரண்டையும் இறுதிநாள்வரை பாதுகாக்கும் பொறுப் பையும் தானே வைத்துக்கொண்டான். குர்ஆனையும், ஹதீஸையும் பாதுகாக்க மனன சக்தியுள்ளவர்களை வெளிப்படுத்தி அவர்களை பயன்படுத் தினான். அவ்விரண்டையும் தவறான கொள்கைகளிலும், பிழையான விளக்கங்களிலுமிருந்தும் பாதுகாக்க மார்க்க அறிஞர்களை பயன்படுத் தினான். ஒவ்வொரு காலத்திலும் தேவைப்படும் அமைப்புக்களில் பாது காவலர்களை ஏற்படுத்தினான். அறிஞர்கள் அவ்வப்போது உருவாகும் தவறான கொள்கைகளையும், பிழையான விளக்கங்களையும் அறிவு பூர்வமாக எதிர்கொண்டனர். மார்க்கத்தின் சிறிய, பெரிய ஒவ்வொரு விடயத்தையும் பாதுகாத்தனர்.

குர்ஆன், ஹதீஸை பாதுகாப்பதற்கு அமைக்கப்பட்ட அடிப்படை சட்டங்களில் முதன்மையானது அறிவிப்பாளர் தொடர் இருப்பதாகும். அவர்கள் உறுதிமிக்கவர்களாகவும், நினைவாற்றல் நிறைந்தவர்களா கவும், நம்பிக்கைக்குரியவர்களாகவும் இருப்பதுமாகும். அப்துல்லா ஹிப்னு முபாரக் رحمه الله அவர்கள் கூறுகிறார்கள்: " அறிவிப்பாளர் தொடர் தீனில் உள்ளதாகும், அத்தொடர் இல்லையேல் விரும்பியவர் விரும்பியதை யெல்லாம் மார்க்கமெனக் கூறிடுவர் " இப்னு ஹஸ்ம் رحمه الله அவர்கள் கூறுகிறார்கள்: "அறிவிப்பாளர் தொடர் இடையில் முறியாது, நபியிடமிருந்தும், நம்பகமான உறுதிமிக்க அறிவிப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிடமிருந்தும் ஒருவர் மற்றவருக்கு அறிவித்துக்கொடுப்பது எந்த நபிக்கும் கிடைக் காத ஒரு விடயமாகும். ஆனால் அதனை அழ்ழாஹ் முஹம்மத் ஸல்லழ்ழாஹு" அலைஹிவஸல்லம் அவர்களுக்கு விசேசமாகக் கொடுத்துள்ளான், தௌராத்தின் அறிவிப்பாளர் தொடர் முப்பது ஆண்டுகளுக்கும் அதிகமான கால இடைவெளியில் அறிவிப் பாளர் தொடர் முறிவுள்ளது, கிறிஸ்தவர்கள் விவாகரத்து செய்வது ஹறாம் எனும் சட்டத்தை மட்டுமே சரியான அறிவிப்பாளர் தொடருடன் பெற்றுக் கொண்டனர். அதல்லாது பொய்யர்கள் மூலமும், ஆள் அறியப்படாதவர்கள் மூலமும் அறிவிப்புகள் அதிகம் உள்ளன".

எனவே ஒவ்வொரு ஹதீஸும் மேல் சொல்லப்பட்ட அமைப்பில் அறிவிப்பாளர் தொடருடன் இருப்பது காட்டாயமாகும். இல்லையேல் எமது நபிமொழிக் களஞ்சியங்கள் பொய்கள் குவிந்துள்ள தௌராத் தையும், இன்ஜீலையும் போன்றாகிவிடும். ஒரு ஹதீஸின் அறிவிப்பாளர் உறுதிமிக்கவர் நம்பகமானவர், சரியான கொள்கையும், நன்னடத்தை யுமுடையவர், நினைவாற்றல் மிக்கவர் என்பதை தலைசிறந்த அறிஞர்கள் சாட்சி கூறவேண்டும். அப்பொழுது தான் அந்நபி மொழி சரியானதெனத் தீர்ப்புக் கொடுக்கப்படும். இவ்வடிப் படைச் சட்டத்தை குர்ஆன் "தக்வீர்" எனும் அத்தியாயத்தில் சூசகமாகக் கூறியிருக்கிறது. இந்த குர்ஆனை நபியவர்களிடம் கொண்டுவந்து ஒப்படைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பற்றி அழ்ழாஹ் : **"அவர் கண்ணியமிக்கவர், எல்லாவித சக்தியுமுள்ளவர், அழ்ழாஹ்விடம் பெரும் அந்தஸ்துக் குரியவர், மலக்குகள் அனை வரும் அவருக்கு வழிபடுகிறார்கள், நம்பிக்கைக்குரியவர்"** என சாட்சி கூறியுள்ளான்.

எனவே ஒரு ஹதீஸின் அறிவிப்பாளர் இவ்வாறு அறிஞர்கள் மூலம் சாட்சி சொல்லப்பட வேண்டும் என்பதை அறிஞர்கள் கற்றுக் கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு சிறந்த ஒரு மாதிரியாக இத்தொகுப்பு அமைந்துள்ளது. இன்று புதுக்கருத்துக்களைப் பின்பற்ற ஆசை கொண்டுள்ள சிலர் தமது தொழுகையையும் புதுப்புது விதமாகத் தொழுகின்றனர். அப்பு துக்கருத்துக்களிலொன்றுதான் : ஸுஜூதிற்குப் பின் நிலைக்கு வரும் பொழுது கையை எவ்வாறு ஊன்றுவதென்பது.

இத்தொகுப்பில் இப்புதுக்கருத்தை சிறப்பான அமைப்பில் தொகுத்து எழுதப்பட்டுள்ளது. பல கலைகளில் ஆற்றல்மிக்க அறிஞர் களின் தொகுப்புக்களைப் போன்று அமைந்துள்ளது. இவ்வாய்வில் கையை ஊன்றும் விதம் பற்றி வந்துள்ள அறிவிப்புக்களை ஓரிடத்தில் ஒன்று சேர்த்து, வித்தியாசப்படும் வார்த்தைகளை இனங்கண்டு, அவ் வார்த்தைகளில் முரண்பட்டுத் தனித்து நிற்கும் சொல்லைத் தனியாக எடுத்து, அத்தனித்து நிற்கும் சொல்லை அறிவித்தவரையும் இனங் காட்டியுள்ளார். பின்பு ஹதீஸ் கலையின் மேற்சொல்லப்பட்ட அடிப்ப டைச்சட்டத்தின் படி அச்சொல்லை அறிவித்த அவ்வறிவிப்பாளர் எப்படி யானவர் என்ற வினாவிற்கு முன்னோர்களிடம் தெளிவான பதில் இல்லாததால் அவ்வறிவிப்பாளர் "நிலை அறியப்படாதவர்" என்ற பட்டி யலில் இடம் பெற்றுள்ளார் அதனால் "மாக்குழைப்பது போல் கையை ஊன்றி நிலைக்கு வந்தார்கள்" என்ற முரண்பட்ட சொல் மிக பலவீன மானது, ஆதாரமாகக் கொள்ள முடியாதது எனத் தெளிவுபடுத் தியுள் ளார்.

மேலும் "மாக்குழைப்பது போன்று கையையூன்றினார்" என்பதின் அறபிச்சொல்லின் சரியான கருத்தை உறுதிமிக்க அறபு அகராதிகளி லிருந்தும் எடுத்தெழுதியுமுள்ளார். இதனால் மாக்குழைப்பது போன்று கையூன்றியது வயோதிபம், பலவீனம் காரணமாக எனத் தெளிவா கின்றது.

எனவே இத்தொகுப்பு பயன் மிக்கதாய் அமைந்துள்ளது. அரைகுறையாய்க் கற்று தன் கருத்தே சரியெனத் தம்பட்டமடிப்ப


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களுக்கும், இப்புதுக்கருத்தை கேள்விப்பட்டு, சரியான விதம் எது? என தடுமாறிக்கொண்டிருந்த பாமரர்களுக்கும், இன்னும் ஆலிம்களுக்கும் பயனுள்ளதாய் அமைந்துள்ளது.

அழ்ழாஹ் இத்தொகுப்பாசிரியரின் முயற்சியை ஒப்புக் கொண்டு அதனை எல்லா மக்களுக்கும் பயனுள்ளதாய் ஆக்குவானாக, மேலும் பயனுள்ள அறிவை மக்களுக்குக் கொடுப்பதுடன், கொடுத்த அறிவையும் பயனுள்ளதாக ஆக்குவானாக! ஆமீன்.

இவ்வண்ணம்.

அஷ்ஷெய்க் **M.T.M.** ஸல்மான் (பின்னூரீ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கையின் ஜம்இய்யதுல் உலமா பத்வாக் குழுவின் மிகமுக்கிய ஆலிம்களில் ஒருவரும், ஜாமிஅதுல் பாரி அறபுக் கல்லூரியின் அதிபரும், எனது நண்பருமாகிய அன்புக்குரிய அல் உஸ்தாத்: A.R. அப்துற்றஹ்மான் (மழாஹிரி) அவர்கள் மனமு வந்தளித்த சிறப்பு மிகு:**

## ஆசியுரை.

بسم الله الرحمن الرحيم

الحمد لله رب العالمين ، وصلى الله وسلم على خير خلقه سيدنا محمد وعلى آله ومن سار على نهجه إلى يوم الدين .

எமது இஸ்லாம் மார்க்கம் மிகத்தெளிவான உண்மையான ஒரு மார்க்கமாகும் என்பதை பிறமதத்தவர்கள் கூட உணர்ந்து வருகிறார்கள், இம்மார்க்கத்தில் நேர்மையாகவும் பயபக்தியுடனும் நடந்து கொள்ளும் ஒவ்வொருவரையும் ஈடேற்றத்தின்பால் கொண்டு செல்வதும், தவறுபவர்களை திருத்துவதும், திருந்தவே முடியாத வர்களை தீர்த்துக்கட்டுவதும் இதன் வழமையாகும்.

அந்த வகையில் ஒவ்வொரு காலமும் மார்க்கத்தில் அவ்வப் போது ஏற்பட்ட குழப்பங்களையும், மாயாஜாலங்களையும் முடிவுக்குக் கொண்டு வர அல்லாஹு"த் தஆலா உலமாக்களையே பயன்படுத்தினான் என்பதும் வரலாற்றுண்மைகளாகும், அத்தொடரில் அமைதியாகவும் ஒற்றுமையாகவும் கட்டுப்பாட்டுடனும் இருந்த இலங்கை வாழ் முஸ்லிம்களை பிளவுபடுத்த "தூயமார்க்கம்" என்ற போர்வையில் வந்திருக்கும் நவீன கருத்துக்களை எழுத்தாலும் நாவாலும் முறியடித்து எமது முஸ்லிம்களை பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு எமது உலமாக்களுக்குண்டு.

அப்பொறுப்புணர்ச்சியின் வெளிப்பாடுதான் இந்நூல், இந்நூலில் ஒரு நவீன அமலுக்கு தகுந்த பதில்களையும், அறிஞர்கள் யாரும் ஏற்காத அந்த விடயத்தில் முற்கால அறிஞர்களின் நிலைப்பாடாகிய வற்றையும் தெளிவான ஆதாரங்கள் மூலம் நிரூபித்திருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் வல்ல அழ்ழாஹ் இந்நூலை பயனுள்ளதாக ஆக்க வேண்டும், இன்னும் இந்நூலாசிரியரான எமது கலாசாலையின் ஹதீஸ் துறை போதனாசிரியர் அல் உஸ்தாத் **M.Z.M.** அமீனுத்தீன் (றசாதி - மழாஹிரி) அவர்களுக்கு இல்மிலும் வாழ்க்கையிலும் பரகத் செய்து இன்னும் பல சேவைகளையும் செய்ய தவ்பீக் செய்வானாக! ஆமீன்.

இப்படிக்கு.

அஷ்ஷெய்க் **A.R.** அப்துற்றஹ்மான் (மழாஹிரி).

2005-12-28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

بسم الله الرحمن الرحيم

## முன்னுரை.

الحمد لله ، والصلاة والسلام على سيدنا محمد ﷺ وآله وصحبه ومن تبعهم بإحسان إلى يوم الدين

أما بعد .

இஸ்லாத்தின் சட்டக்கலை நிபுணர்களுக்கு மத்தியில் முதலாவது மூன்றாவது ரக்அத்துக்களில் ஸுஜூது செய்த பின்பு "ஜல்ஸதுல் இஸ்திராஹா" (جلسة الاستراحة) எனும் இரண்டு ரக்அத்துக் களுக்கு மத்தியில் உட்காரும் இருப்பு இருக்கின்றதா? இல்லையா? எனும் விடயத்தில் பெரிய கருத்து வேற்றுமை உள்ளது போன்று, ஸுஜூதிலிருந்தோ அல்லது அவ்விருப்பிலிருந்தோ எழும்பும் போது கைகளை ஊன்றி எழுவதிலும் கருத்து வேற்றுமை உள்ளது. இதில் இமாம் ஷாபிஈ رحمه الله அவர்களின் மத்ஹபின் பிரகாரம் ஷாபிஈ மத்ஹபைச் சார்ந்தவர்கள் பூமியின் மீது இரு கைகளையும் ஊன்றியே எழுவார்கள், இதற்கு மாற்றமாக ஏனைய மூன்று மத்ஹபுகளைச் சார்ந்தோரும் "ஜல்ஸதுல் இஸ்திராஹா" (جلسة الاستراحة) எனப்படும் இருப்பை உட்காராது முழங்கால்கள் இன்னும் தொடைகளின் மீது கைகளை ஊன்றியே எழுவார்கள்.

மார்க்கச் சட்டக்கலை நிபுணர்களின் கருத்து வேற்றுமைக்கு அப்பாற்பட்டு இன்னுமொரு கருத்துவேற்றுமை புதிதாக உருவாகி யுள்ளது. அதுதான் பூமியில் கைகளை ஊன்றும் போது எவ்வாறு ஊன்றுவது? என்பதாகும். பூமியில் கைகளை ஊன்றி எழ வேண்டும் எனும் ஷாபிஈ மத்ஹபைச் சார்ந்தோர் இரு கைகளையும் விரித்து அதன் விரல்களை மடிக்காது உள்ளங்கைகளைப் பூமியில் ஊன்றியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழ வேண்டும் என்கின்றனர். ஆனால் ஒரு கூட்டம் இரு கைகளையும் பொத்தி விரல்களின் வெளிப்புரத்தைப் பூமியில் ஊன்றியே எழவேண் டும் என்பதையே சரியானது எனக் கூறிக்கொண்டு, எல்லா பர்ழான ஸுன்னத்தான தொழுகைகளிலும் அதனை ஸுன்னத்து எனக் கருதி செய்துவருகின்றனர். அஷ்ஷெய்க் நாஸிருத்தீன் அல்பானி தான் அபூஇஸ் ஹாக் அல் ஹார்பீ رحمه الله அவர்களின் "ஙரீபுல் ஹதீஸ்" (غريب الحديث) எனப்படும் நூலிலிருந்து ஒரு ஹதீஸைக் கொண்டுவந்து அந்த ஹதீஸ் "ஹஸன்" (حسن) இன்னும் (صالح) "ஸாலிஹா"னது எனக்கூறி, முதல் முத லில் இதனை ஸுன்னத்து எனக் கூறுவதே சரியானது என அறிமுகம் செய்துளவைத்தார்.[1]

"ஸிபதுஸலாதின் நபிய்யி ﷺ" : (ப/137).

"ஸில்ஸிலதுல் அஹாதீஸில் ழஈபா" : (2/392,393).

அல்பானியால் சரிகாணப்பட்ட இச்செயல் சிலரிடம் பரவவே அதற்குப் பல உலமாக்களும் மறுப்புத் தெரிவித்தனர். அவ்வாறு இச்சட்டப்பிரச்சினையில் அல்பானிக்கு மறுப்பாக எழுதப்பட்டவைகளும் அதன் ஆசிரியர்களின் பெயர்களும் வருமாறு.

1. "ரத்துத் தஸ்ஹீஹில் வாஹின் லிஹதீஸில் ஆஜின்".

(رد التصحيح الواهن لحديث العاجن)

---

1. இந்த அஷ்ஷெய்க் நஸிருத்தீன் அல்பானி என்பவர் யார்? என்பதைத் தனியாகவே இந்நூலின் ஆரம்பத்தில் குறிப்பிடப்படும், அங்கு அவரைப் பற்றிப் படித்துப் பார்த்து விட்டு அவர் ஒரு விடயத்தை சரிசெய்யவும் பிழை எனத் தீர்ப்பளிக்கவும் தகுதியானவரா? என்பதை வாசகர்கள் முடிவெடுக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் ஹஸனுப்னு அலிய்யிஸ்ஸக்காப்.

2. ஜுஸ்உன் பீகைபிய்யதின் நுஹூழி பிஸ்ஸலாதி வழு:.பு ஹதீஸில் அஜ்ன்.

(جزء في كيفية النهوض في الصلاة وضعف حديث العجن)

அஷ்ஷெய்க் பக்ருப்னு அப்திழ்ழாஹ், அபூஸைத். இவர் வஹ்ஹாபிக ளின் பெரும் வழிகாட்டிகளில் ஒருவர். இவரின் இந்நூல் சுமார் 90 பக் கங்களைக் கொண்டதாகும். அடியேனின் இந்நூலை இதன் சுருக்கம் எனக் கூறமுடியும் ஏனெனில் இந்நூலை வைத்தே அடியேனின் இச்சிறு நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

3. "தொழுகையில் கையூன்றல்" எனும் தலைப்பில் "இதுதான் சத்தியத்தின் தீர்வு" எனும் நூலில் நம் நாட்டில் இச்சட்டப்பிரச் சினைக்கு முதல் முதலில் பதில் எழுதப்பட்டது. இதனை மர்ஹூம் **A.M.M.** நஸீம் **B.A** (அஸ்ஹரி) رحمه الله அவர்கள் எழுதினார்கள்.

இவர்களோ வஹ்ஹாபிகளின் அச்சுறுத்தலையும் மிரட்டலையும் பொருட்படுத்தாது, வீரதீரத்துடன் சத்தியத்திற்காகப் போராடி, மலர்ந்த மாத்திரத்திலே உதிர்ந்த மலராய் இறையடியெய்தியவர்கள். அவர் களின் கப்றை அழ்ழாஹ் சுவர்க்கப் பூஞ்சோலையாக ஆக்கிவைத்து, அன்னாரை உயர்ந்த பிர்தவ்ஸ் எனும் சுவனபதியில் வாழவைப்பா னாக!

இவ்வாறு உலமாக்கள் இச்செயலுக்கு மறுப்புத்தெரிவிக்கக் காரணம், இது புதிதாக ஸுன்னத்து எனச் செய்யப்படும் செயலும், எந்த முஸ்லிம்களும் அதனை அல்பானி கூறுவதற்கு முன்பு ஸுன் னத்து எனக் கேள்விப்படாததுமாகும். ஆனாலும் ஆங்காங்கே சில வயோதிபர்களினால் இச்செயல் தங்கடம் எனும் அடிப்படையில் (ஸுன்னத்து எனக் கருதியல்ல) செய்யப்பட்டு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை ஸுன்னத்து எனவும் இதற்கு மாறு செய்வது வழி கெட்ட பித்அத்து எனவும் கூறி சில வாலிபர்களினால் இச்செயல் அமுல் செய்யப்பட்டுவருவது உம்மத்தினர் மத்தியில் பல பிரச்சினை களை உருவாக்கி விட்டது. அதில் மிகப்பிரதானமானது, முன் சென்ற பெரும் பெரும் மேதைகள் இஸ்லாத்தின் சட்டங்களை அறியாமலி ருந்ததும், அவ்வாறு தெரிந்திருந்தாலும் இதனை ஸுன்னத்து எனக் கூறாமல் மார்க்கத்தை மூடி மறைத்து பின்னோர்களுக்கு அநியாய மிழைத்து விட்டார்கள் என்பன போன்ற பிரமைகளை உண்டாக்கிவிட் டதுமாகும். ஆகவே நமது முன்னோர்கள் ஷரீஅத்தைப் பூரணமாகவும் தெளிவாகவும் எம்வரைக்கும் எத்திவைக்கும் விடயத்தில் எள்ளளவும் எமக்கு மோசடி செய்யவுமில்லை, அநியாயமிழைக்கவு மில்லை என்பதை உறுதிப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

இச்சட்டப்பிரச்சினையோ பலகோணங்களில் ஆராயப்படவிருக்கி றது, அதனை பொறுமையுடன் ஆவேசமின்றி நிதானமாகக் கடைசி வரை உண்மையை விளங்கும் நோக்குடன் படித்து, உண்மை புலப் பட்டதும் அதனைக் கடைசி மூச்சுவரை அமுல் செய்யவும் அழ்ழாஹ் جل جلاله நம்மனைவருக்கும் நல்லருள்புரிவானாக! ஆமீன்.

இச்சிறு நூல் உருவாவதற்கு என் அருமை நண்பர்களான மௌலவி அக்மல் (தீனீ), மௌலவி இல்மான் (இன்ஆமீ) ஆகியோரே காரணம் எனக் கூறமுடியும். ஏனெனில் இது எழுதப்பட்டு இடை வழியில் விடப்பட்டிருந்தது, இவ்விருவரும் அதனைப் பூர்த்தி செய்யும் படி பல முறை என்னை உற்சாகப் படுத்திக் கொண்டிருந்ததுடன் அதற்குத் தேவையான பல உதவிகளையும் புரிந்தனர். அழ்ழாஹுத ஆலா அவர்களுக்குக் கிருபை செய்வதுடன் ஈருலக எல்லாப் பாக்கி யங்களையும் வழங்குவானாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இந்நூலை சரிபார்த்து அதற்கு மதிப்புரையும் தந்த என் அருமை உஸ்தாத் அஷ்ஷெக் அபுல் ஹஸன் (மதனீ) دامت بركاته அவர்களுக்கும். மத்ரஸாவின் விடுமுறைகளையும் கூட தனது சொந்த விடயங்களில் கழிக்காது இந்நூலை சரிபார்ப்பதிலும் அடிப்படை நூல்களில் ஒப்பிட்டுப்பார்ப்பதிலும் கழித்து அழகிய வடிவில் இந்நூல் அமைய மிகப் பெரும் காரணமாக இருந்து, இந்நூலுக்கு அணிந்துரையும் அளித்த மௌலவி **A.L.M.** ரிழா மக்தூமீ **B.A.** (ஹஸனி) دامت بركاته அவர்களுக்கும், இன்னும் இந்நூலை சரிபார்த்து அதற்கு சிறப்புரையும் வழங்கிய என் அருமை உஸ்தாத் அல் ஹாபிழ் மௌலவி **M.T.M.** ஸல்மான் (தப்லீகி, பின்னுரி) دامت بركاته அவர்களுக்கும், மேலும் இந்நூலுக்கு ஆசியுரை வழங்கிய மௌலவி அல் ஹாபிழ் **A.R.** அப்துற் றஹ்மான் (மழாஹிரி) دامت بركاته அவர்களுக்கும், இன்னும் பல நீண்ட பிரயாணங்களுக்கு மத்தியிலும் பிரயாணங்களிலேயே இதனை சரிபார்த்து அது பற்றி பல முக்கிய ஆலோசனைகளைத்தந்த மௌலவி ஸாதிக் (ஹாஷிமீ) دامت بركاته அவர்களுக்கும், இன்னும் இந்நூலை அச்சிட பொருளாதார வகையில் உதவியாக இருந்த எனது உடன் பிறப்புச் சகோதரர்களான **M.Z.M.** அன்வர்தீன், **M.Z.M.** அஸ்வர்தீன் ஆகியோருக்கும், இன்னும் எனக்குப் பல விதத்திலும் உதவியாக இருந்தவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள் எப்போதும் உண்டாவதாக! அல்லாஹுதஆலா அவர்கள் அனைவருக்கும் ஈருலக அனைத்துப் பாக்கியங்களையும் வழங்கு வதுடன் உயர்ந்த ஜன்னதுல் பிர்தவ்ஸில் இடமளிப்பானாக!

அல்லாஹுதஆலா இந்நூலை ஏற்றுக் கபூல் செய்து, தீனுக் கென்றே தங்கள் காலத்தையும் வாழ்க்கையையும் கழித்த இமாம்கள் தீனின் பாதுகாவலர்களே என உம்மத்துக்கு உறுதிப்ப டுத்தி, அதற்கு மாற்றமாகப் பேசுவோர் தீனின் பெயரில் தீனை நசுக்கு கின்றவர்களே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அவர்களை இனம் காட்டிய நன்மையை தந்து, அனைவருக்கும் இந்நூலின் மூலம் பிரயோஜன மடைய நல்லருள் புரிவானாக எனப் பிரார்த்திக்கின்றேன். அல்ழாஹுதஆலாவே எனக்குப் போதுமானவன், அவனிடமே என் அனைத்துக் காரியங்களையும் பாரம்சாட்டி, அவனிடமே மீளுகின்றேன்.

வஸ்ஸலாம்.


ஆக்கியோன்.

**மௌலவி M.Z.M. அமீனுத்தீன் (றஷாதீ).**

**337/7 Abdull Azeez Mawatta,**
**Kurunduwatta,**
**Gintotoa,**
**Galle,**
**Sri Lanka.**

**M.B.A. College,**
**Buhari Masjidh Mawata**
**Galbokka ,**
**Weligama,**
**041-2250336**

**21.11.2004**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யார் இந்த அஷ்ஷெய்க் நாஸிருத்தீன் அல்பானி?

விடயத்திற்கு வருமுன் இந்த செயலைப் புதிதாக ஸுன்னத்து என மக்களுக்கு அறிமுகம் செய்து வைத்தவர் யார்? என்பதைப் பார்ப்போம். அவரே **அஷ்ஷெய்க் நாஸிருத்தீன் அல்பானி** என்பவரா வார். இவர்பற்றி நம் நாட்டு மக்களுக்கு சரியாகவே முதல் முதலில் அறிமுகம் செய்து வைத்தவர் மர்ஹூம் மௌலவி **A.M.M.** நஸீம் **B.A.** (அஸ்ஹரீ) رحمه الله அவர்களாவார்கள். அவர்கள் தங்களின் "இதுதான் சத்தியத்தின் தீர்வு" (ப/17, 18) எனும் நூலில் இவர் பற்றி எழுதுகையில் **"அஷ்ஷெய்க் நாஸிருத்தீன் அல்பானி என்பவர் யார்?"** எனும் தலைப்பின் கீழ் பின்வருமாறு கூறுகிறார்கள்:

((இவர் அல்பேனியாவைச் சேர்ந்தவர், சிரியா நாட்டுப் பிரஜா உரிமை பெற்றவர், — தற்போது (1997ல்) — ஜோர்தான் நாட்டில் வசித்துவருகிறார், (இப்போது மரணமடைந்து விட்டார்) தாமாகவே ஹதீஸ் கலையைக் கற்றார், மேதையானார்!! ஹதீஸ் கலையில் ஒரு ஆசானிடம் கல்விகற்று அதைப் பிறருக்கு எத்திவைக்கும் அனுமதியை அவரிடம் பெறுவதே நபியவர்களின் வழிகாட்டலாகும், அது இவருக்குக் கிடைக்கவில்லை, அறிவுடன் சேர்த்து தலைக்கனமும் தலைக்கு ஏறியது.

ஹதீஸ்களை அரித்து வடித்தெடுக்கும் பொறுப்பைக் கையேற் றார். அனைத்து இமாம்களையும் விமர்சனம் செய்ய ஆரம்பித்தார், புகாரி, முஸ்லிம் சரீப்கள் உட்பட அனைத்தும் அவருக்குக் கிள்ளுக் கீரையானது, புகாரி சரீபில் இமாம் புகாரி رحمه الله அவர்களுக்கு மாறாக அங்கு காணும் ஹதீஸ்களையும் சரி பிழை கண்டார். இவரது தீவிரப் போக்கையும் பிறரை விமர்சிக்கும் கேவலமான நாவையும் கண்ட சவூதி அரசு அங்கு மார்க்கப் பிரச்சாரங்கள் செய்ய அனுமதி மறுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. அவரது நூல் வெளியீடுகளுக்கான சகல கொடுப்பனவு களையும் இரத்து செய்தது.

கொடுப்பனவுகள் இரத்து செய்யப்படவே சவூதிய அரச குடும் பத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கினார், சில நெருக்கடிகள் ஏற்பட்டன. அவ்விவரங்கள் பற்றி மக்காவைச் சேர்ந்த அஷ்ஷெய்க் அஹமது அப்துல் கபூர் அத்தார் அவர்கள் பின்வரும் நூலில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். "கேடு உண்டாகட்டும், ஈமான் கொள். அல்பானியின் வழிகேடுகளுக்கு தக்க பதில்" என்பதே அந்த நூல்.

அறிவியல் ரீதியாகவும் அல்பானி சர்ச்சைக்குரிய நபரானார், விமர்சனங்கள் மாத்திரமல்ல பலத்த கண்டனத்துக்கும் ஆளானார், எகிப்து, சிரியா, லெபனான், லிபியா, மொரோக்கோ, சூடான், சவூதி, குவைட், டுபாய், இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் அறிஞர் பெருமக்கள் அல்பானியின் கொள்கையை எதிர்த்தனர். இலங்கை யிலிருந்து ஜாமியா பின்னூரிய்யா போன்ற (பாகிஸ்தான்) கல்விக் கூடங்களில் ஹதீஸ்கலையைக் கற்கச் சென்ற மாணவர்கள் கூட அல் பானியின் கருத்துக்களை விமர்சித்து ஆய்வுகளை மேற்கொண்டனர்.

அல்பானியின் திறமைக்கு ஒரு சான்றைக் கூறி விடயத்தை சுருக்கிக் கொள்கிறேன். அல்பானி கைவைக்காத ஹதீஸ் கிரந்தங் களே கிடையாது எனலாம். சில கிரந்தங்களில் அவர் சரி கண்ட ஹதீஸ்களை வேறு சிலகிரந்தங்களில் அவரே பலமாக விமர்சித்து பலவீனப்படுத்தியுள்ளார். ஆனால் அதுபற்றி அவருக்கே தெரியாது. இவ்வாறான முரண்பாடான கருத்துக்களை அஷ்ஷெய்க் ஹஸன் இப்னு அலி அஸ்ஸக்காப் அஷ்ஷரீப் அவர்கள், ஒன்று சேர்த்து தொடராக வெளியிட்டு வருகிறார்கள் "ஹதீஸ்களை சரிபிழை காணும் போது அல்பானி இழைத்த தெளிவான முரண்பாடுகள்" என்று அந்த ஆய்வு பெயரிடப்பட்டுள்ளது.

இந்நூலின் முதற்பாகத்தில் சுமார் 250 ஹதீஸ்களுக்கு முரண் பாடான சட்டங்கள் வழங்கியுள்ளமையும், ஹதீஸ்கலை பற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது கற்பனைக்கான சில உதாரணங்களும், இமாம்களைக் காரசாரமாக விமர்சனம் செய்து விட்டு அதேபோன்ற தவறுகளை இவரே இளைத்திருக்கிறார் என்பதும் தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

இரண்டாம்பாகத்தில் சுமார் 652 ஹதீஸ்களுக்கு முரண்பட்ட சட்டங்களை வழங்கியுள்ளமையும், ஹதீஸ்கலையின் மேதைகளான இமாம் தகபி, ஹாகிம், முன்திரி, இப்னுகத்தான், இப்னு ஹுஸைமா, இப்னு ஹிப்பான், இப்னு ஜவ்ஸி, இப்னு ஹஜர், இப்னு சுப்கி போன் றோரைக் கேவலமான வார்த்தையால் வர்ணித்துள்ளமை சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

**(தற்போது இந்நூலின் மூன்றாம் பாகமும் வெளிவந்துள்ளது)**

இதற்குப் பின் இவரது தகைமை பற்றி நாம் விமர்சிக்க வேண்டியதில்லை வாசகர்கள் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள்)).

எனினும் இவருக்கு மறுப்புத்தெரிவித்து எழுதப்பட்ட சில நூல்களின் பெயர்களை நூலாசிரியர்களின் பெயர்களுடனே கூறுவது உஷிதம் என நான் எண்ணுகிறேன். இவர் பற்றி சரியான அறிமுக மற்றவருக்கு அவை சரியான அறிமுகத்தை வழங்கும். அவைகளின் பெயர்கள் நூலாசிரியர்களின் பெயர்களுடன் வருமாறு:

1. التعقب الحثيث على من طعن فيما صح من الحديث ( مطبوع).

**1.** அத்தஅக்குபுல் ஹஸீஸ் அலாமன் தஅன பீமாஸஹ்ஹ மினல் ஹதீஸ்.

2. نصرة التعقب الحثيث على من طعن فيما صح من الحديث . ( مطبوع) .

**2.** நுஸ்ரதுத் தஅக்குபில் ஹஸீஸ் அலா மன்தஅன பீமா ஸஹ்ஹ மினல் ஹதீஸ்.

لمحدث الديار الشامية الشيخ عبد الله بن محمد الهرري .

இவ்விரு நூல்களும் அஷ்ஷெய்க் அப்துழ்ழாஹுப்னு முஹம்மத் அல்ஹரரீ அவர்களுக்குரியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. الألباني شذوذه وأخطاؤه . (مطبوع في أربعة أجزاء ) .

**3.** அல் அல்பானிய்யு சுதூதுஹு வஅக்தாஉஹு.

لمحدث الديار الهندية ، شيخ شيخنا المفتي زين العابدين الأعظمي : حبيب الرحمن الأعظمي ،

المشهور "بالمحدث الكبير" .

அஷ்ஷெய்க் ஹபீபுர்ரஹ்மான் அல்அ.'.ழமீ رحمه الله .இவர்களுக்கு "முஹத்திஸுல் கபீர்" எனக் கூறப்படும். இவர்களோ எனது ஆசிரியரான அஷ்ஷெய்க் முப்தி ஸைனுல் அபிதீன் دامت بركاته அவர்களின் ஆசிரியராவார்கள். இந்நூலோ நான்கு ஜுஸ்உக்க ளைக் கொண்டதாகும்.

4. إرغام المبتدع الغبي بجواز التوسل بالنبي في الرد على الألباني الوبي . ( مطبوع) .

**4.** இர்ஙாமுல் முப்ததிஇல் ஙபிய்யி பி ஜவாஸித் தவஸ்ஸுலி பின்நபிய்யி பிர்ரத்தி அலல் அல்பானிய்யில் வபிய்யி.

5. القول المقنع في الرد على الألباني المبتدع .

**5.** அல்கவ்லுல் முக்னிஇ பிர்ரத்தி அலல் அல்பானிய்யில் முப்ததிஇ.

لمحدث شمالي أفريقيا ، الشيخ عبد الله بن محمد صديق الغماري .

அஷ்ஷெய்க் அப்துல்லாஹிப்னு முஹம்மத் ஸித்தீக் அல்குமாரீ அல் ஹஸனீ رحمه الله.

6. بيان نكث الناكث المتعدي بتضعيف الحارث .

**6.** பயானு நக்ஸின் நாகிஸில் முதஅத்திய்யி பி தழ்ஈபில் ஹாரிஸி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

للشيخ المحدث عبد العزيز بن محمد صديق الغماري . ( شقيق السابق ) .

அஷ்ஷெக் அப்துல் அஸீஸுப்னு முஹம்மத் ஸித்தீக் அல்குமாரீ رحمه الله .

7. وصول التهاني بإثبات سنّية السبحة ، والرد على الألباني . ( مطبوع ) .

7. வுஸூலுத் தஹானிய்யி பிஇஸ்பாதி ஸுன்னிய்யதிஸ் ஸுப்ஹதி, வர்ரத்தி அலல் அல்பானிய்யி.

8. تنبيه المسلم إلى تعدّي الألباني على صحيح مسلم . ( مطبوع ) .

8. தன்பீஹுல் முஸ்லிமி இலா தஅத்தில் அல்பானிய்யி அலா ஸஹீஹி முஸ்ஸிம்.

للشيخ المحدث محمود سعيد ممدوح .

அஷ்ஷெய்க் மஹ்மூத் ஸஈத் மம்தூஹ் دامت بركاته .

9. تصحيح حديث صلاة التراويح عشرين ركعة ، والرد على الألباني في تضعيفه . ( مطبوع ) .

9. தஸ்ஹீஹு ஹதீஸி ஸலாதித் தராவீஹி இஷ்ரீன ரக்அதன் வர்ரத்து அலல் அல்பானிய்யி பீ தழ்ஈபிஹி.

10. إباحة التحلي بالذهب المحلق للنساء والرد على الألباني في تحريمه . ( مطبوع ) .

10. இபாஹதுத் தஹல்லிய்யி பிஸ்ஸஹபில் முஹல்லகி லின் நிஸாஇ, வர்ரத்து அலல் அல்பானிய்யி பீ தஹ்ரீமிஹீ.

11. تعليقات على سلسلة الأحاديث الضعيفة والموضوعة للألباني . ( لم يطبع ) .

11. த.'.லீகாதுன் அலா ஸில்ஸிலதில் அஹாதீஸில் ழஈபதி வல் மவ்ழூஅதி லில் அல்பானிய்யி.

للشيخ إسمعيل بن محمد الأنصاري ، البلخث في دار الإفتاء بالرياض .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் இஸ்மாஈலுப்னு முஹம்மத் அல்அன்ஸாரீ دامت بركاته .

12. الألباني تطرفاته . ( مقالة في جريدة "الإتحاد" الصادرة يوم الخميس 3 يوليو ، سنة 1986 ) .

**12.** அல் அல்பானிய்யு ததர்ருபாதுஹூ.

للشيخ محمد بن أحمد الخزرجي .

அஷ்ஷெய்க் முஹம்மதுப்னு அஹ்மத் அல் கஸ்ரஜீ دامت بركاته .

13. أنوار المصابيح على ظلمات الألباني في صلاة التراويح . ( طبع في بيروت ، مطابع دار الغد ).

**13.** அன்வாருல் மஸாபீஹி அலா ழுலுமாதில் அல்பானிய்யி பீ ஸலா தித் தராவீஹி.

للشيخ بدر الدين حسن دياب الدمشقي .

அஷ்ஷெய்க் பத்ருத்தீன் ஹஸன் தய்யாப் அத்திமஷ்கீ دامت بركاته .

14. أقرب الوسائل المقصودة في بلوغ الهداية المنشودة . ( طبع في دمشق ) .

**14.** அக்ரபுல் வஸாஇலில் மக்ஸூததி பீ புலூகில் ஹிதாயதில்மன்சூததி.

للشيخ محمد عارف الدمشقي .

அஷ்ஷெய்க் முஹம்மத் ஆரிப் அத்திமஷ்கீ دامت بركاته .

15. خطبة الحاجة ليست سنة في مستهل الكتب والمؤلفات كمايقول الشيخ الألباني . ( مطبوع ) .

**15.** குத்பதுல் ஹாஜதி லய்ஸத் ஸுன்னதன் பீ முஸ்தஹல்லில் குதுபி வல் முஅல்லபாதி கமா யகூலுஷ்ஷெய்குல் அல்பானிய்யு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. كلمات في كشف أباطيل وافتراءات . ( وهي رد على أباطيل وافتراءات الألباني وصاحبه

سابقا زهير الشاويش – ومؤزريها ) .

**16.** கலிமாத்துன் பீ கஷ்பி அபாதீல வப்திராஆதின்.

للشيخ المحدث عبد الفتاح أبو غدة .

அஷ்ஷெய்க் அப்துல் பத்தாஹ் அபூகுத்தாஹ் رحمه الله .

17. قاموس شتائم الألباني وألفاظه المنكرة التي يطلقها في حق علماء الأمة وفضلائهم وغيرهم .

( مطبوع ) .

**17.** காமூஸு ஷதாஇமில் அல்பானிய்யி வஅல்பாழுஹு"ல் முன் கரதுல்லதீ யுத்லிகுஹா பீ ஹக்கி உலமாஇல் உம்மதி வ புழலாஇஹிம் வ ஙய்ரிஹிம்.

18. تحذير العبد الأوّاه من تحريك الإصبع في الصلاة . ( مطبوع ) .

**18.** தஹ்ஸீருல் அப்தில் அவ்வாஹி மின் தஹ்ரீகில் இஸ்பஇ பிஸ்ஸலாதி.

19. القول المبتوت في صحة حديث صلاة الصبح بالقنوت . ( مطبوع ) .

**19.** அல் கவ்லுல் மப்தூது பீ ஸிஹ்ஹதி ஹதீஸி ஸலாதிஸ் ஸு"ப்ஹி பில் குனூதி.

20. الشماطيط فيما يهذي به الألباني في مقدماته من تخبطات وتخليط . ( مطبوع ) .

**20.** அஷ்ஷமாதீது பீமா யுஹ்தீ பிஹில் அல்பானிய்யு பீ முகத்த மாதிஹி மின் தகப்புதாதின் வதக்லீதின்.

21. الشهاب الحارق المنقض على إيقاف المتناقض المارق . ( مطبوع ) .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**21.** அஷ்ஷிஹாபுல் ஹாரிகுல் முன்கழு அலா ஈகாபில் முதனாகிழில் மாரிகி.

22. إعلام المبيح الخائض بتحريم مس القرآن وقراءته على الجنب والحائض . ( مطبوع ) .

**22.** இ∴லாமுல் முபீஹில் காஇழி பிதஹ்ரீமி மஸ்ஸில் குர்ஆனி வகிராஅதிஹி அலல் ஜுனுபி வல் ஹாஇழி.

23. اللجيف الذعاف للمتلاعب بأحكام الإعتكاف .

**23.** அல் லஜீபுத்திஆபு லில் முதலாஇபி பிஅஹ்காமில் இ∴திகாபி.

24. القول الثبت في صيام يوم السبت .

**24.** அல்கவ்லுஸ் ஸப்த் பீ ஸியாமி யவ்மிஸ் ஸப்தி.

كلها للشيخ السيد حسن بن علي السقاف .

அஷ்ஷெய்க் ஹஸனுப்னு அலிய்யிஸ் ஸக்காப். இவை தவிர இன்னும் பல நூல்களை இவர்கள் அல்பானிக்கு மறுப்பாக எழுதியுள்ளார்கள், இவர்களை அழ்ழாஹுதஆலா அல்பானியின் மோசடிகளை இந்த உம்மத்துக்கு தெளிவுபடுத்தவெனவே தேர்ந்தெடுத்துள்ளான் எனக் கூற முடியும்.

25. تبيين ضلالات الألباني . ( مطبوع ) .

**25.** தப்யீனு ழலாலாதில் அல்பானிய்யி.

لبعض تلاميذ الشيخ الهرري .

அஷ்ஷெய்க் அப்துழ்ழாஹில் ஹரரீ அவர்களின் சில மாண வர்களுக்குரிய நூலாகும்.

26. بيان أوهام الألباني في تحقيقه لكتاب فضل الصلاة على النبي ﷺ . (طبع دار الرازي بالأردن) .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. பயானு அவ்ஹாமில் அல்பானிய்யி பீ தஹ்க்கீகிஹி லிகிதாபி ஸிஃபதிஸ்ஸலாத்தி அலன்னபிய்யி ﷺ.

27. تخريج حديث أوس الثقفي . (طبع دار الرازي بالأردن) .

27. தக்ரீஜு ஹதீஸி அவ்ஸிஸ் ஸகபி.

كلاهما للشيخ أسعد سالم تيم .

அஷ்ஷெய்க் அஸ்அத் ஸாலிம் தய்யிம்.

28. التعريف بأوهام من قسم السنن إلى صحيح وضعيف . (طبع ) .

28. அத்தஃரீபு பி அவ்ஹாமி மன் கஸ்ஸமஸ் ஸுனன இலா ஸஹீஹின் வ ழஈபின்.

للجنة من العلماء .

உலமாக்களின் ஒரு குழு

29. حوار مع الألباني .

29. ஹிவாருன் மஅல் அல்பானிய்யி.

للشيخ شميم محمد بن محمد عبد السلام ، نال به الماجستير في الجامعة الإسلامية العربية بنوري

تاون بباكستان .

அஷ்ஷெய்க் சமீம் முஹம்மத் (அல்பின்னூரீ) دامت بركاته .

30. القول المستحسن في الذب عن السنن . ( لم يطبع ) .

30. அல்கவ்லுல் முஸ்தஹ்ஸன் பித்தப்பி அனிஸ்ஸுனன்.

لشيخنا المحدث إلياس بن محمود السيلاني دامت بركاتهما ، نال به الماجستير في الجامعة

الإسلامية العربية بنوري تاون بباكستان ، شيخ الحديث الآن في مدرسة الرشاد بكولمبو .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது உஸ்தாத் அஷ்ஷெய்க் இல்யாஸ் (அல்பின்னூரீ) دامت

بركاته அவர்களுக்குரியது. இவர்கள் தற்போது கொழும்பு

மத்ரஸதுற் றஷாத் அறபுக் கல்லூரியில் ஷெய்குல் ஹதீஸாக கடமையாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இவை தவிர அல்பானிக்கு மறுப்பாக எழுதப்பட்ட இன்னும் பல நூல்கள் உள்ளன. அவைகளை ஒன்று சேர்த்து ஒரு அகரா தியையே எழுதி அதற்கு "காமூஸுர் ருதூதி அலல் அல்பானிய்யி" قاموس الردود على الألباني (அல்பானிக்கு எதிரான அறிஞர்களின் பதிலடிக் கலஞ்சியம்) எனப் பெயரிடமுடியும் அந்தளவு இவருக்கு மறுப்பாக பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன.

அல்பானிக்கு மறுப்பாக எழுதப்பட்ட நூல்களில் சிலவற்றை இங்கு கூறக்காரணம்: அல்பானியின் கொள்கையைப் புரிந்து கொள் ளாத நம்நாட்டு சில உலமாக்களின் கூற்றுக்களே, அவர்கள் முன் சென்ற பெரும் பெரும் இமாம்களுக்கு மாற்றமாக உள்ள இவரின் கருத்துக்களை வேதவாக்கியமெனக் கருதி அவரைப் பின்பற்றுபவர்க ளின் கருத் துக்களை எதிர்க்கக்கூடாது என குத்பாக்களில் கூடக் கூறுகின்றனர். இவ்வாறு அவர்கள் கூறுவதற்குக்காரணம்: அவர்க ளுக்கு அல்பானி யின் கொள்கை பற்றிய சரியான விளக்கமில் லாமையே. குறிப்பாக அவ்வாறான உலமாக்கள் இங்கு கூறப்பட்ட நூல்களைப் படித்துப் பார்க்கட்டும், அவ்வாறு படித்தால் அல்பானி பற்றிய சரியான விளக் கத்தைப் பெற்றுக்கொள்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

بسم الله الرحمن الرحيم

இந்த சட்டப்பிரச்சனை பல கோணங்களில் பற்பல பிரிவுகளாக கீழ்வருமாறு ஆராயப்படும்.

ஆய்வு - 1: ஸுஜூதிலிருந்து அல்லது இருப்பிலிருந்து எழும் முறைகளைக் குறிப்பிடும் ஹதீஸ்கள் பற்றியது.

ஆய்வு - 2: மாக்குலைப்பவன் போன்று எழுவார்கள் எனக் கூறப்படும் ஹதீஸ் பற்றியது.

ஆய்வு - 3: அந்த ஹதீஸின் தரம் பற்றியது.

ஆய்வு - 4: மார்க்க சட்டக்கலை உலமாக்களாகிய புகஹாக்களிடம் "அல்அஜ்ன்" என்ற அறபிப்பதத்தின் வரலாறுபற்றியது.

ஆய்வு - 5: அரேபியர்களின் பரிபாசையில் "அல்அஜ்ன்" என்றால் என்னவென்பது பற்றியது.

## ஆய்வு ~ (1) : ஸுஜூதிலிருந்து அல்லது இருப்பிலிருந்து எழும் முறைகளைக் கூறும் ஹதீஸ்கள்.

தொழுகையில் நிலைக்கு எழும் முறைகளைக் குறிப்பிடும் ஹதீஸ்களில் நபி ﷺ அவர்களின் பக்கம் இணைத்து ஏழு ஸஹாபாக்க ளின் மூலம் ஸஹீஹான மேலும் ழஈபான, இன்னும் அதனையும் விடத் தரங்குறைந்த பல ஹதீஸ்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவ்வேழு ஸஹாபாக்களின் பெயர்களும் வருமாறு:

1. மாலிகுப்னுல் ஹுவைரிஸ் رضي الله عنه.
2. வாஇலுப்னு ஹுஜ்ர் رضي الله عنه.
3. அலிய்யுப்னு அபீதாலிப் رضي الله عنه.
4. முஆதுப்னு ஜபல் رضي الله عنه.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஷன்தம் رضي الله عنه.

6. அபூஹுரைரா رضي الله عنه.

7. அப்துல்லாஹிப்னு உமர் رضي الله عنهما.

1. மாலிகுப்னுல் ஹுவைரிஸ் رضي الله عنه அவர்களின் ஹதீஸ்.

இந்த ஹதீஸ் பின்வரும் நூல்களில் இடம் பெற்றுள்ளது.

1. அல் உம்மு (இமாம் ஷாபிஈ رحمه الله) : (1/227).

2. அல் முஸ்னத் (இமாம் அஹ்மத் رحمه الله): (24/365) எண்: (15599).

3. அஸ்ஸஹீஹ் (இமாம் புகாரி رحمه الله) பத்ஹுல் பாரீ : (2/288) எண்: (802), (2/303) எண்: (824).

4. அஸ்ஸுனன் (இமாம் அபூதாவுத் رحمه الله) அவ்னுல் மஃபூத் : (3/53) எண்: (837).

5. அஸ்ஸுனன் (இமாம் நஸாஈ رحمه الله) : (2/233, 234).

6. அல் முஸன்னப் (இமாம் இப்னு அபீஷைபா رحمه الله) : (1/396).

7. அஸ்ஸஹீஹ் (இமாம் இப்னு குஸைமா رحمه الله) : (1/342).

8. அல் முஸ்னத் (இமாம் ஸர்ராஜ் رحمه الله) : (ப/109).

9. ஷரஹு மஆனில் ஆஸார் (இமாம் தஹாவீ رحمه الله) : (2/405).

10. முஃஜமுல் கபீர் (இமாம் தபரானீ رحمه الله) : (19/287) எண்: (634), (19/289) எண்: (642).

11. ஸுனனுல் குப்றா (இமாம் பைஹகீ رحمه الله) : (2/178) எண்: (2757, 2759, 2760), (2/194) எண்: (2805).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. ம.்.ரிபதுஸ் ஸுனனி வல் ஆஸார் (இமாம் பைஹகீ رحمه الله) : (2/20, 21) எண்: (867, 868).

மேற் கூறப்பட்டுள்ள நூல்களில் இந்த ஹதீஸ் வார்த்தை வித்தியாசத்துடன் ரிவாயத்துச் செய்யப்பட்டுள்ளது, அவைகளை மூன்று முறைகளில் இங்கு குறிப்பிடலாம்.

1. அஹ்மத், புகாரி, தஹாவீ, அபூதாவூத் ﷺ போன்றோரின் சில அறிவிப்புக்களில் நிலத்திலோ அல்லது முழங்கால்களிலோ ஊன்றுவது பற்றிக் கூறப்படவேயில்லை.
2. புகாரீ, ஸர்ராஜ், பைஹகீ (தனது ம.்.ரிபாவில்) ﷺ போன் றோரின் சில அறிவிப்புக்களில் "இரண்டாவது ஸுஜூதிலிருந்து தலையைத் தூக்கி உட்கார்ந்து பூமியின் மீது ஊன்றி பின்பு எழுந்தார்கள்" என உள்ளது.
3. சாபிஈ, இப்னு அபீஷைபா, தபரானீ, பைஹகீ, நஸாஈ, இப்னு குஸைமா ﷺ போன்றோரின் சில அறிவிப்புக்களில் "இரண்டா வது ஸுஜூதிலிருந்து தலையை உயர்த்தி உட்கார்ந்து பின்பு பூமியின் மீது ஊன்றியவர்களாக எழுவார்கள்" என உள்ளது.

எனினும் மேற்கூறப்பட்ட ஹதீஸின் எந்த வொரு அறிவிப்பிலும் "தங்களின் இரு கைகளையும் ஊன்றி" எனும் வார்த்தை பிரயோகிக்கப்படவேயில்லை அத்தோடு அல்பானியும் தனது "ஸில்ஸிலதுல் அஹாதீஸிழ்ழஈபா" (2/392) எனும் நூலில்; உறுதிமிக்க சில உலமாக்கள் எந்த ஒரு ஹதீஸின் அறிவிப்பிலும் "இருகைகளை யும் ஊன்றி" எனும் வார்த்தையே இல்லை என உறுதியாகக் கூறியுள்ளனர். என எடுத்தெழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் மாலிகுப்னுல் ஹுவைரிஸ் رضي الله عنه அவர்களின் இந்த ஸஹீஹான ஹதீஸில் நபி ﷺ அவர்கள் பூமியின் மீது கைகளை ஊன்றியவர்களாகவே எழுந்தார்கள், அல்லது கைகளைப் பூமியின் மீது வைக்காமல் "ஜல்ஸதுல் இஸ்திராஹா" (جلسة الاستراحة) எனப் படும் இரண்டாவது ஸுஜுதிற்குப் பின்னால் உட்காரும் சிறு இருப்பில் உட்காராமல் கால்களைமாத்திரம் பூமியில் ஊன்றி எழுந்தார்கள் என்ற இருவிதக் கருத்துக்களுக்கும் இடம்பாடு உள்ளது. எனவே நபி ﷺ அவர்கள் கைகளை இவ்வாறு ஊன்றித்தான் எழுந்தார்கள் என உறுதியாகச் சொல்ல முடியாது.

2. வாஇலுப்னு ஹுஜ்ர் رضي الله عنه அவர்களின் ஹதீஸ்.

இவர்களால் மூன்று ஹதீஸ்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

(முதலாம் ஹதீஸ்) : நபி ﷺ அவர்களின் தொழுகையை விவரித்துக் கூறிய ஹதீஸாகும், இது பின்வரும் நூற்களில் இடம் பெற்றுள்ளது:

1. அஸ்ஸுனன் (இமாம் அபூதாவூத் رحمه الله): (3/47, 48), எண்: (833, 834)
2. அஸ்ஸுனன் (இமாம் நஸாஈ رحمه الله) : (2/207, 234).
3. அஸ்ஸுனன் (இமாம் இப்னு மாஜஹ் رحمه الله) : (1/286), எண்: (882).
4. அஸ்ஸுனன் (இமாம் தாரிமீ رحمه الله) : (1/303).
5. அஸ்ஸஹீஹ் (இமாம் இப்னு குஸைமா رحمه الله): (1/318) எண்: (626).
6. அஸ்ஸஹீஹ் (இமாம் இப்னு ஹிப்பான் رحمه الله) : (3/149) எண்: (1908).
7. ஷரஹுமஆனில் ஆஸார் (இமாம் தஹாவீ رحمه الله) : (1/150).
8. அஸ்ஸுனன் (இமாம் தாரகுத்னீ رحمه الله) : (1/337), எண் : (1292).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. மு..ஜமுல் கபீர் (இமாம் தபரானீ رحمه الله) : (22/27, 28) எண்: (60), (22/39, 40) எண்: (97).

10. அல் முஸ்தத்ரக் (இமாம் ஹாகிம் رحمه الله) : (1/349) எண்: (822).

11. ஸுனனுல் குப்றா (இமாம் பைஹகீ رحمه الله) : (2/142) எண்: (2628).

12. ம..ரிபதுஸ்ஸுனனி வல்ஆஸார் (இமாம் பைஹகீ رحمه الله) : (2/3) எண்: (833).

இந்த ஹதீஸ் ஐந்து அறிவிப்பாளர் தொடர்களுடன் அறிவிக்கப்பட்டுள்ளது. அவைகளில் எந்த ஒரு தொடரிலும் கைகளை ஊன்றுவது கூறப்பட வில்லை, ஆனாலும் ஒரேயொரு தொடரில்: நபி ﷺ அவர்கள் தனது தொடையின் மீது ஊன்றி எழுந்தார்கள் எனக் கூறப்பட்டுள்ளது. இது ஆபூதாவூத், தபரானீ, ஸுனனுல் குப்றா ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

எனினும் இந்த ஹதீஸின் சிலஅறிவிப்பாளர் தொடரில் வாஇலுப் னு ஹுஜ்ர் رضي الله عنه அவர்களுக்கும், அவர்களின் ஒரு மகனான அப்துல் ஜப்பார் அவர்களுக்கும் மத்தியில் "அல் இன் கிதாஉ" (الإنقطاع) எனப் படும் துண்டிப்பு உள்ளது.[2]

இது பற்றி இமாம் நவவீ رحمه الله அவர்கள் தங்களின் "அல் மஜ்மூஉ" (4/586) வில்:

---

[2] • அறிவிப்பாளர் தொடரில் ஹதீஸை அறிவிக்கும் ஒரு அறிவிப்பாளருக்கும், அவர் யாரிடமிருந்து அந்த ஹதீஸை அறிவிக்கிறாரோ அவருக்கும் மத்தியில் எவ்வித சந்திப்போ தொடர்போ கிடையாது என ஊர்ஜிதமானால் அதற்கு "அல் இன்கிதாஉ" (الإنقطاع) துண்டிப்பு , முறிவு எனப்படும். இம்முறையில் அறிவிக்கப்படும் ஹதீஸுக்கு "அல்முன்கதி.." (المنقطع) அதாவது அறிவிப்பாளர் தொடர் துண்டிக்கப்பட்ட , முறிவுற்ற ஹதீஸ் எனச் சொல்லப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

إتفق الحفاظ على أنّ عبد الجبار لم يسمع من أبيه شيئا ولم يدركه "அப்துல் ஜப்பார் தங்களின் தந்தையிடமிருந்து எதனையும் கேட்கவில்லை, மேலும் தந்தையை அவர்கள் அடைந்து கொள்ளவுமில்லை எனும் விடயத்தில் ஹதீஸ் கலை மேதைகள் ஒன்றுபட்டுள்ளனர்" எனக் கூறியுள்ளார்கள். அவ்வாறே அவர்கள் தங்களின் தந்தையிடமிருந்து எதனையும் கேட்கவில்லை என புகாரீ, இப்னு மஈன், அபூதாவூத் ﷺ போன்ற ஹதீஸ் கலை மாமேதை களும் கூறியுள்ளார்கள்.

"தஹ்தீபுத் தஹ்தீப்" (ஹபிழ் இப்னு ஹஜர் رحمه الله) : (5/14, 15) எண்: (3849).

(இரண்டாம் ஹதீஸ்) : இதனை இமாம் பஸ்ஸார் رحمه الله அவர்கள் தங்களின் "அல்முஸ்னத்" எனும் நூலில் பதிவு செய்துள்ளதாக இமாம் ஹைஸமீ رحمه الله அவர்கள் தங்களின் "மஜ்மஉஸ்ஸவாஇத் வமன்பஉல் பவாஇத்": (1/320) எண்: (1178), (2/267, 268) எண்: (2805) எனும் நூலில் கூறியுள்ளார்கள்.

இந்த ஹதீஸிலும் கைகளை ஊன்றுவது பற்றியோ, அல்லது ஊன்றும் முறை பற்றியோ கூறப்படவில்லை. மேலும் இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடரில் முஹம்மதுப்னு ஹுஜ்ர் எனும் ஒரு அறி விப்பாளர் உள்ளார் அவர் பற்றி இமாம் ஹைஸமீ رحمه الله அவர்கள் தங் களின் "மஜ்மஉஸ்ஸ வா இதில்" (1/320) : وفيه محمد بن حجر، وهو ضعيف

**"இதிலே முஹம்மதுப்னு ஹுஜ்ர் உள்ளார். அவரோ பலவீனமானவர்"** எனக் கூறியுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் இந்த ஹதீஸைப் பற்றி இமாம் ஹாபிழ் இப்னு ஹஜர் رحمه الله அவர்கள் தங்களின் 'தல்கீஸுல் ஹபீர் பீ தக்ரீஜி அஹாதீஸிர் ராபிஇய்யில் கபீர்" (1/624) : எனும் நூலில்:

ذكره النووي في " الخلاصة " في فصل الضعيف ، وذكره في شرح المهذب فقال : غريب .

"இமாம் நவவீ رحمه الله அவர்கள் தங்களின் "அல்குலாஸா" எனும் நூலில் இந்த ஹதீஸை பலவீனமான ஹதீஸ்களின் பிரிவில் கூறியுள்ளார்கள். மேலும் அவர்கள் தங்களின் "அல்மஜ்மூஉ" வில்: இந்த ஹதீஸ் ஙரீ பானது (غريب) [3] எனக் கூறியுள்ளார்கள்". என எடுத்தெழுதியுள்ளார்கள்.

(மூன்றாம் ஹதீஸ்) : இதனை இமாம் தபரானீ رحمه الله அவர்கள் தங்களின் "அல்மு.'.ஜமுல் கபீர்" : (22/39) எண்: (95) ல் பதிவு செய் துள்ளார்கள். அதிலே வாஇல் رضي الله عنه அவர்கள்: "நான் நபி ﷺ அவர்கள் எழும் போது ஒருகையிலே சாய்ந்து (ஊன்றி) எழும்பியதைக் கண் டேன்" எனக் கூறுகிறார்கள். இந்த ஹதீஸை இமாம் ஸுயூத்தீ رحمه الله தங்களின் "அல் ஜாமிஉஸ் ஸகீர்": (ப/420), எண்: (6768)ல் அறிவிப்புச் செய்து விட்டு, இது பலவீனமான ஹதீஸ் எனச்சுட்டிக்காட்டி யுள்ளார்கள். மேலும் இந்த ஹதீஸிலும் எழும்பும் போது ஒருகையில் சாய்ந்து (அதிலே ஊன்றி) எழுந்தார்கள் எனக் கூறப்பட்டிருந்தாலும் கையை ஊன்றும் முறை கூறப்படவில்லை.

---

3 • ஒரு ஹதீஸ் ஒரேயொரு அறிவிப்பாளர் தொடருடன் அறிவிக்கப்பட்டால், அல்லது ஒரு ஹதீஸ் பல அறிவிப்பாளர் தொடர்களின் வழியாக அறிவிக்கப்பட்டு அவ்வெல்லாத் தொடர்களினதும் மூலதளம் (சந்திப்பு) ஒரேயொரு அறிவிப்பாளரை மையமாகக் கொண்டிருந்தால் அந்த ஹதீஸை "ஙரீப்" غريب என அழைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அலிய்யுப்னு அபீதாலிப் رضي الله عنه அவர்களின் ஹதீஸ்.

இந்த ஹதீஸ் பின்வரும் நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1. அல் முஸன்னப் (இமாம் இப்னு அபீஷைபா رحمه الله) : (1/374), எண்: (3998).
2. ஸுனனுல் குப்றா (இமாம் பைஹகீ رحمه الله) : (2/195), எண்: (2812).
3. அல் முக்தாரா (இமாம் லியாஉல் மக்திஸீ رحمه الله) : (1/260).

இந்த ஹதீஸின் மூலவாக்கியம் வருமாறு:

إنّ من السنة في الصلاة المكتوبة إذا نهض الرجل في الركعتين الأولين أن لايعتمد بيديه على الأرض إلا أن يكون شيخا كبيرا لايستطيع .

"ஒருவர் ஆரம்ப இரு ரக்அத்துக்களிலிருந்தும் எழும்பும் போது அவர் மிக முதிர்ந்த வயோதிபராக இல்லாமலிருந்தால் பூமியில் இருகைகளையும் ஊன்றி எழும்பாமலிருப்பது பர்ழான தொழுகையின் ஸுன்னத்தில் நின்றுமுள்ளதாகும்".

இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடரில் அப்துர்ரஹ்மானிப்னு இஸ்ஹாக் அல்கூபீ எனும் பலவீனமான அறிவிப்பாளர் இருப்பதினாலும், இன்னும் அவரின் ஆசிரியரான ஸியாதுப்னுஸ் ஸைத் எனும் (مجهول) மஜ்ஹூலான ஆலே அறியப்படாத ஒருவர் இருப்பதினாலும் இந்த ஹதீஸ் பலவீனமானது.

அப்துர்ரஹ்மான் : தக்ரீபுத்தஹ்தீப் : (1/330), எண்: (3906).

ஸியாத் : தக்ரீபுத் தஹ்தீப் : (1/186), எண்: (2147).

மேலும் இந்த ஹதீஸில் வயோதிபர்களல்லாதோர் கைகளைப் பூமியில் ஊன்றி எழுவதை விட ஊன்றாமலிருப்பதே சிறந்ததெனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்பட்டுள்ளதுடன், வயோதிபர்கள் கையை ஊன்றும் முறை எவ்வாறானது எனக் கூறப்படவில்லை.

4. முஆதுப்னு ஜபல் ﷺ அவர்களின் ஹதீஸ்.

இந்த ஹதீஸில்:

وكان يمكن جبهته وأنفه من الأرض ، ثم يقوم كأنه السهم لايعتمد على يديه .

"நபி ﷺ அவர்கள் ஸுஜூது செய்யும் போது தங்களின் நெற்றியையும், மூக்கையும் நிலத்தில் தரிபடுத்தி வைத்தே ஸுஜூது செய்வார்கள், பின்பு தனது இரு கைகளின் மீதும் ஊன்றாமல் அம்பைப் போன்று எழுந்து நிற்பார்கள்". எனக் கூறப்பட்டுள்ளது. இந்த ஹதீஸை இமாம் தபரானீ رحمه الله அவர்கள் தங்களின் "அல் முஃஜமுல் கபீர்" : (20/74, 75), எண்: (139)ல் அறிவிப்புச் செய்துள்ளார்கள். இந்த ஹதீஸின் தரம் பற்றி இமாம் ஹைஸமீ رحمه الله அவர்கள் தங்களின் "மஜ்மஉஸ்ஸவாஇத்" : (2/268), எண்: (2806)ல்:

وفيه الخصيب بن جحدر وهوكذاب . "இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசையில் கஸீபுப்னு ஜஹ்தர் எனும் அறிவிப்பாளருள்ளார் அவர் பொய்யர்" எனக் கூறியுள்ளார்கள். மேலும் இப்னு ஹஜர் அல் அஸ்கலானீ رحمه الله அவர்கள் தங்களின் "தல்கீஸுல் ஹபீர்" : (1/624), எண்: (388)ல்:

كذبه شعبة ، ويحي القطان . "ஷுஃபாவும், யஹ்யல்கத்தானும் இவரைப் பொய்ப்பித்துள்ளார்கள்" எனக் கூறியுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 5. ஷன்தம் رضي الله عنه அவர்களின் ஹதீஸ்.

இந்த ஹதீஸில்:

إنّ النّبي ﷺ كان إذا سجد وقعت ركبتاه إلى الأرض قبل كفيه ، وإذا قام يصلي الركعتين إعتمد على فخذيه ونهض على ركبتيه .

"நபி ﷺ அவர்கள் ஸுஜூதுக்கு செல்லும் போது தங்களின் இரு முழங்கால்களும் இரு கைகளுக்கும் முன்பே பூமியைப் போய் அடைந்து விடும். (அதாவது தன் இரு முழங்கால்களையும் கைக ளுக்கு முன்னால் பூமியில் வைப்பார்கள்) இன்னும் அவர்கள் இரண் டாவது ரக்அத்தை தொழஎழுந்தால் தங்களின் இருகைகளையும் இரு தொடைகளிலும் ஊன்றி (ஜல்ஸதுல் இஸ்திராஹா - جلسة الاستراحة எனப்படும் இருப்பை உட்காராது) முழங்கால்களில் ஊன்றியவாறே எழுந்து விடுவார்கள்". எனக் கூறப்பட்டுள்ளது.

இந்த ஹதீஸை ஹாபிழ் இப்னு ஹஜர் رحمه الله அவர்கள் தங்களின் "அல் இஸாபா பீ தம்யீஸிஸ் ஸஹாபா": (3/292), எண்: (3944) எனும் நூலில் பகவீ, இப்னுஸ்ஸகன், இப்னுகானி. رحمهم الله போன்ற இமாம்களின் நூல்களிலிருந்து எடுத்தெழுதி விட்டு, இமாம் பகவீ رحمه الله அவர்களின். لم أسمع شنتم يذكر إلاّ في هذا الحديث "இந்த ஹதீஸைத்தவிர வேறு எந்த ஹதீஸிலும் ஷன்தம் கூறப்படுவதை நான்கேட்டதில்லை" எனும் கூற்றையும், இமாம் இப்னுஸ்ஸகன் رحمه الله அவர்களின்: . وهو غير مشهور في الصحابة ، ولم أسمع به إلاّ في هذه الرواية "ஷன்தமோ ஸஹாபாக்களில் பிரபல்யமல்லாதவர், இந்த அறிவிப்பிலேயன்றி இவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரை நான் கேட்டதில்லை" எனும் கூற்றையும் எடுத்தெழுதியுள் ளார்கள்.

இன்னும் இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடரில் ஷகீக் அபூலைஸ் எனும் ஒருவருள்ளார், இவரைப் பற்றி இமாம் இப்னுல் கத்தான் رحمه الله அவர்கள் கூறுகையில் : شقيق هذا ضعيف لا يعرف بغير رواية همام

"இந்த ஷகீக் பலவீனமானவராவார், ஹம்மாமின் அறிவிப்பின் மூலமே யன்றி இவர் அறியப்படமாட்டார்" எனக் கூறியுள்ளார்கள்.

"தஹ்தீபுத் தஹ்தீப்" : (3/651), எண்: (2797).

ஹாபிழ் இப்னு ஹஜர் رحمه الله அவர்களோ இவரை (مجهول) "மஜ்ஹூல்" ஆலே அறியப்படாதவர் எனக் கூறியுள்ளார்கள்.

"தக்ரீபுத் தஹ்தீப்" : (1/246), எண்: (2897).

இந்த ஹதீஸை ஸஹீஹானது என வைத்துக் கொண்டாலும் இதிலோ கைகளைப் பூமியிலூன்றுவது பற்றிக் கூறப்படவேயில்லை.

6. அபூஹுரைரா رضي الله عنه அவர்களின் ஹதீஸ்.

இது பின்வரும் நூல்களில் இடம் பெற்றுள்ளது.

1. அஸ்ஸுனன் (இமாம் திர்மிதீ رحمه الله) "துஹ்பதுல் அஹ்வதீ": (2/146), எண்: (287).
2. அல்காமில் பில்ழுஅபா (இமாம் இப்னு அதீ رحمه الله) : (3/414).
3. அஸ்ஸுனன் (இமாம் ஸஈதுப்னு மன்ஸூர் رحمه الله) : பத்ஹுல் பாரீ: (2/303).

இந்த ஹதீஸின் எல்லா அறிவிப்பாளர் தொடர்களிலும் காலிதுப்னு இல்யாஸ் (அல்லது இயாஸ்) எனும் ஓர் அறிவிப்பாளருள்ளார். இவரைப் பற்றி ஹாபிழ் இப்னு ஹஜர் رحمه الله அவர்கள் தங்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தக்ரீபுத் தஹ்தீப்": (1/148), எண் (1676) ல்: متروك الحديث "இவரின் ஹதீஸ் (ஆதாரமாக எடுக்கப்படாமல்) விடப்படும்" என்றும், தங்களில் "தல்கீஸுல் ஹபீர்" (1/86) ல்: منكر الحديث "இவர்முன்கருல் ஹதீஸா வார்". எனவும் கூறியுள்ளார்கள்.

இந்த ஹதீஸின் வாசகங்கள் இரு விதத்திலுள்ளன:

1. كان النبيّ ﷺ ينهض في الصلاة على صدور قدميه .

1. நபி ﷺ தொழுகையில் எழும்பும் போது தனது பாதங்களில் ஊன்றியே எழும்புவார்கள்.

2 . كان رسول الله ﷺ إذا نهض من الركعتين وضع يديه على فخذيه .

2. நபி ﷺ இரண்டாவது ரக்அத்திலிருந்து எழும்பும் போது தனது இரு தொடைகளிலும் இரு கைகளையும் ஊன்றி எழும்புவார் கள். (இவ்வாசகமோ இப்னு அதீ رحمه الله அவர்களுக்குரியது).

இந்த ஹதீஸின் முதல் வாசகத்தில் பூமியில் கைகளை ஊன்றுவது பற்றிச் சொல்லப்படவேயில்லை, இரண்டாவது வாசகத் தில் கைகளைத் தொடையில் ஊன்றுவது பற்றியே கூறப்பட் டுள்ளது (பூமியிலூன்றுவது பற்றியல்ல), மேலும் சுருங்கக் கூறின் இந்த ஹதீஸ் பலவீனமானதுமாகும்.

**7. அப்துல்லாஹிப்னு உமர் رضي الله عنهما அவர்களின் ஹதீஸ்.**

இவர்களின் மூலம் தொழுகையில் எழும் முறை பற்றி இரு ஹதீஸ் கள் அறிவிக்கப்பட்டுள்ளன, அவையாவன:

**முதலாம் ஹதீஸ் :**

نهى رسول الله ﷺ أن يعتمد الرجل على يده إذا نهض في الصلاة .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு மனிதர் தொழுகையிலே எழும்பும் பொழுது தன் கையின் மீது ஊன்றி எழும்புவதை நபி ﷺ அவர்கள் தடை செய்தார்கள்".

இந்த ஹதீஸ் பின்வரும் நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1. அஸ்ஸுனன் (இமாம் அபூதாவூத் رحمه الله ) அவ்னுல் மஃபூத்: (3/200), எண்: (988).
2. ஸுனனுல் குப்றா (இமாம் பைஹகீ رحمه الله ) : (2/194), எண்: (2807).

இரண்டாம் ஹதீஸ் :

இந்த ஹதீஸில் தான் நபி ﷺ அவர்கள் மாக்குழைப்பவனைப் போன்று இரு கைகளையும் பூமியில் ஊன்றியவாரே எழுவார்கள் எனக் கூறப்பட்டுள்ளது, ஆனால் இதுவோ (منكر) முன்கர் எனத் தீர்ப்புக் கொடுக்கப்பட்ட ஆதாரமே எடுக்க முடியாத ஹதீஸாகும், இதுவே நமது ஆய்வில் அலசப்பட வேண்டிய பிரதான ஹதீஸ் என்பதனால் அதனைத் தனியாகவே ஆராய்வோம்.

இவ்விரு ஹதீஸ்களும் நபி ﷺ அவர்களின் மூலம் அப்துல்லா ஹிப்னு உமர் رضي الله عنهما அவர்கள் அறிவித்தவைகளாகும். மேலும் அப்துல்லாஹ் رضي الله عنه அவர்களின் செயலின் மூலமும் இரு முறைகள் ஹதீஸ் கிரந்தங்களில் காணப்படுகின்றன, அவைகளாவன:

முதலாம் முறை :

கைகளைப் பூமியின் மீது ஊன்றாது "ஜல்ஸதுல் இஸ்திராஹா" (جلسة الاستراحة) எனப்படும் இரண்டாவது ஸுஜுதிற்குப் பின்பு உட்காரும் சிறு இருப்பை உட்காராது அவ்வாரே ஸுஜுதிலிருந்து நேரடியாக நிலைக்கு எழும்புவதாகும். இம்முறை இப்னு உமர் رضي الله عنهما அவர்க ளின் செயல் மூலம் அறிவிக்கப்படுவதைப் போன்று அப்துல்லாஹிப்னு மஸ்ஊத், அலி رضي الله عنهما போன்றோர்களின் செயல் மூலமும் ஸஹீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹான அறிவிப்பாளர் தொடர்களுடன் அறிவிக்கப்பட்டுள்ளது. இவை களை இப்னு அபீஷைபா رحمه الله அவர்கள் "அல் முஸன்னப்" எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.

1. அப்துல்லாஹிப்னு உமர் رضي الله عنهما.

"அல்முஸன்னப்": (1/346), எண்: (3985).

2. அப்துல்லாஹிப்னு மஸ்ஊத் رضي الله عنه.

"அல்முஸன்னப்": (1/346), எண்: (3979).

3. அலீ رضي الله عنه.

"அல் முஸன்னப்": (1/346), எண்: (3978).

இரண்டாம் முறை :

கைகளை ஊன்றி எழும்புவதாகும். இம் முறையை இரு விதமாக ஹதீஸ்கிரந்தங்களில் காணலாம்.

(1) انه كان يعتمد على يديه.

தங்களின் இரு கைகளின் மீதும் ஊன்றுபவர்களாக இப்னு உமர் رضي الله عنهما அவர்கள் இருந்தார்கள்.

1. "அல் முஸன்னப்" (இமாம் இப்னு அபீஷைபா رحمه الله) : (1/347), எண்: (3997).

2. "அல் முஸன்னப்" ( இமாம் அப்துர்ரஸ்ஸாக் رحمه الله ) : (2/116) எண்: (2969) , (2/117) எண்: (2974).

எனினும் இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடரில் அப்துல்லாஹிப்னு உமரல் உமரீ எனும் அறிவிப்பாளர் உள்ளார், அவர் பலவீனமானவர்.

"தக்ரீபுத் தஹ்தீப்": (1/302, 303), எண்: (3589).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


(2) إعتمد على الأرض بيديه .

இப்னு உமர் رضي الله عنهما அவர்கள் தங்களின் இருகைகளின் மூலமும் பூமியில் ஊன்றுவார்கள்.

"அஸ்ஸுனனுல் குப்றா": (2/194), எண்: (2806).

இதைப் பற்றி அல்பானி தனது " ஸில்ஸிலதுல் அஹாதீஸில் ழஈபா" (2/392) எனும் நூலில்: إسناده جيد ، رجاله كلهم ثقات " இந்த அறிவிப்பாளர் தொடர் சிறந்தது. இதனின் அறிவிப்பாளர் தொடரில் உள்ளவர்கள் அனைவருமே உறுதிமிக்கவர்கள்" எனக் கூறியிருந்தாலும், இச்செயலில் கைகளை ஊன்றும் முறை கூறப்படவில்லை.

இம்முதலாம் ஆய்விலுள்ள எந்த ஹதீஸை நாம் உற்று நோக்கினாலும் அதில் பூமியில் ஊன்றி எழுவது பற்றிக் கூறப்பட்டாலும் ஊன்றும் முறை அப்துழ்ழாஹிப்னு உமர் رضي الله عنهما அவர்களின் ஹதீஸில் மாத்திரமே கூறப்பட்டுள்ளது. இப்னு உமர் رضي الله عنهما அவர்களின் இந்த ஹதீஸிற்கே "ஹதீஸுல் அஜ்ன்" (حديث العجن) எனக்கூறப்படும், அதனைப் பற்றி அடுத்து வரும் இரண்டாம் ஆய்வில் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வு ~ (2) : இச்சட்டப் பிரச்சினைக்குரிய ஹதீஸாகிய "ஹதீஸுல் அஜ்ன்" (حديث العجن).

இவ்வாய்வினில் " நபி ﷺ அவர்கள் மாக்குலைப்பவனைப் போன்று கைகளை ஊன்றி எழும்புவார்கள்" எனும் ஹதீஸின் வாசகமும், அந்த ஹதீஸ் அறிவிக்கப்பட்டுள்ள நூல்களும், மேலும் அந்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசை பற்றிய ஆய்வும் கூறப்படும்.

அறிவிப்பாளர் தொடருடன் இந்த ஹதீஸின் வாசகம் வருமாறு:

قال أبو إسحق إبراهيم بن إسحق الحربي : ثنا عبد الله بن عمر ، ثنا يونس بن بكير ، عن الهيثم ، عن عطية بن قيس ، عن الأزرق ابن قيس : " رأيت ابن عمر رضي الله عنهما يعجن في الصلاة ، يعتمد على يديه إذا قام ، فقلت له ، فقال : رأيت رسول الله ﷺ يفعله " قال الحربي : قوله " رأيت ابن عمر رضي الله عنهما يعجن " أي يضع يديه على الأرض كما يصنع الذي يعجن .

அபூ இஸ்ஹாக் அல் ஹர்பீ رحمه الله அவர்கள் அப்துல்லாஹிப்னு உமரின் மூலமும், அவர்கள் யூனுஸுப்னு புகைரின் மூலமும், யூனுஸ் அல் ஹைஸமின் மூலமும், ஹைஸம் அதிய்யதுப்னு கைஸின் மூலமும், அதிய்யா அல் அஸ்ரகின் மூலமும் அறிவிக்கின்றார்கள்.

அல் அஸ்ரக் رحمه الله அவர்கள் கூறுகிறார்கள்: "நான் இப்னு உமர் رضي الله عنهما அவர்கள் தொழுகையிலே எழும்பும் போது தனது இருகை களிலும் மாக்குலைப்பவனைப் போன்று (பூமியிலே) ஊன்றி எழுவதைப்பார்த்த போது: ஏன் இவ்வாறு எழுகின்றீர்கள்? எனவின

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியதற்கு, நபி ﷺ அவர்கள் இவ்வாறு செய்வதை நான் பார்த்தேன் எனக் கூறினார்கள்".

நூல் : "ஙரீபுல் ஹதீஸ்" ( غريب الحديث ) - (இமாம் அபூ இஸ்ஹாக் அல் ஹர்பீ رحمه الله ).

"அல் அஜ்ஸாஉல் ஹதீஸிய்யா": (ப/172).

குறிப்பு : இந்த ஹதீஸில் கைகளைப் பூமியிலூன்றுவதா? அல்லது தொடையிலூன்றுவதா? என்பது பற்றித் தெளிவாகச் சொல் லப்படவில்லை. பூமியில் ஊன்றுவதென ஆபூ இஸ்ஹாக் அல் ஹர்பீ رحمه الله அவர்கள் கூறியது ஹதீஸின் வார்த்தை அல்ல, மாறாக அது அவர்களுடைய சொந்த விளக்கமாகும்.

இந்த ஹதீஸ் மேற்கூறப்பட்ட வாசகத்துடனும், அதே அறிவிப்பா ளர் தொடருடனும் இமாம் அபூ இஸ்ஹாக் அல் ஹர்பீ رحمه الله அவர் களின் "ஙரீபுல் ஹதீஸ்" எனும் நூலில் மாத்திரமே கூறப்பட்டுள்ளது.

ஆனாலும் இந்த ஹதீஸின் வாசகமோ "லுஙத்" (لغة) எனும் அறபிப்பாசை பற்றி எழுதப்பட்ட நூல்களிலும், இன்னும் "ஙரீபுல் ஹதீஸ்" (غريب الحديث) எனும் ஹதீஸ்களின் அரும்பத விளக்க நூல்களி லும் "அல் அஜ்ன்" எனும் மூல வார்த்தையின் கீழ் அறிவிப்பாளர் தொடரின்றி வெறுமனே கூறப்பட்டுள்ளது. இன்னும் "பிக்ஹ்" (فقه) எனப்படும் மார்க்கச் சட்டக்கலை நூல்களைச் சார்ந்த இமாம் கஸாலி رحمه الله வின் "அல்வஸீத்", "அல் வஜீஸ்" எனும் நூல்களிலும், இமாம் பைழாவீ رحمه الله வின் "அல்ஙாயதுல் குஸ்வா" (الغاية القصوى) எனும் நூலிலும் இது எழுதப்பட்டுள்ளது. மேலும் ஹதீஸ்கலையின் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவாகிய "தக்ரீஜு ல் ஹதீஸ்" ( تخريج الحديث ) எனப்படும் ஹதீஸ்களின் மூலதளங்களைச் சுட்டிக்காட்டும் நூல்களாகிய இப்னு முலக்கின் رحمه الله வின் "குலாஸதுல் பத்ரில் முனீர்" ( خلاصة البدر المنير ) எனும் நூலிலும், ஹாபிழ் இப்னு ஹஜர் رحمه الله வின் "தல்கீஸுல்ஹபீர்" (التلخيص الحبير)எனும் நூலிலும் அறிவிப்பாளர் தொடரின்றியே கூறப்பட்டுள்ளது.

"அல்அஜ்ஸாஉல் ஹதீஸிய்யா": (ப/173).

இந்த ஹதீஸைப் பற்றி அல்பானி தனது "ஸிபது ஸலாதின் நபிய்யி ﷺ " (ப/196) எனும் நூலில்:

**حديث عزيز ، فات المؤلفين جميعا إسناده "இந்த ஹதீஸ் ஒரு அபூர்வமான இன்னும் நூல்களை இயற்றிய அனைவருக்கும் அதன் அறிவிப்பாளர் தொடர் தப்பிப்போன ஒரு ஹதீஸாகும்"** எனக் கூறியுள்ளார்.

அல்பானி இந்த ஹதீஸை அபூர்வமானது எனக் கூறியதை ஏற் றுக் கொள்ளமுடியும். ஆனாலும் அவர் இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடர் அனைத்து உலமாக்களுக்கும் தப்பிப்போனது (தனக்கு மாத் திரமே இந்த ஹதீஸ் அறிவிப்பாளர் தொடருடன் கிடைத்துள்ளது) எனக் கூறியதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் அவர் இவ் வரே اللهم أحيني مسكينا ، وأمتني مسكينا ، واحشرني في زمرة المساكين எனும் ஹதீ ஸிற்கும் "முஸ்னது அப்திப்னி ஹுமைத்" எனும் நூலிலிருந்து ஒரு அறிவிப்பாளர் தொடரைக் கொண்டு வந்து தனது "ஸில்ஸிலதுஸ் ஸஹீஹா" எண்: (308) லும் இவ்வாறே கூறினார். பின்பு தனது "இவர்வாஉல் ஙலீல்" (3/363), எண்: (861)ல்: தனக்கு இவ்விடயத்தில் தவறு ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அல்அஜ்ஸாஉல் ஹதீஸிய்யா": (ப/174).

குறிப்பு : ஹதீஸ் கலையின் ஒரு பிரிவாகிய "ஙரீபுல் ஹதீஸ்" எனும் ஹதீஸ்களின் அரும்பத விளக்க நூல்களில் ஒரு ஹதீஸ் வருவதும், அல்லது அந்த ஹதீஸுக்கு குறித்த ஒரேயொரு அறிவிப்பாளர் தொடரைத் தவிர வேறு எந்த அறிவப்பாளர் தொடரும் இல்லை என்பதும் அந்த ஹதீஸ் பலமான ஆதாரபூர்வமானது, அல்லது பலவீனமானது என்பதைக் குறிக்காது. ஆகையால் நாம் இந்த அறிவிப்பாளர் தொடரின் தரம் பற்றித் தெளிவுகாண அதன் ஒவ்வொரு அறிவிப்பாளரினதும் தகைமைகளை ஆராய்வோம்.

## (1) இமாம் அபூ இஸ்ஹாக் அல் ஹர்பீ رحمه الله அவர்களின் ஆசிரியர்.

இவரின் பெயர் அப்துழ்ழாஹ்வா? அல்லது உபைதுழ்ழாஹ்வா? என்பதில் கருத்து வேற்றுமை உள்ளது போன்று இவரின் தந்தையின் பெயர் உமரா? அல்லது அம்ரா? என்பதிலும் கருத்து வேற்றுமை உள்ளது.

அல்பானி தனது "அஸ்ஸில்ஸிலதுல் ழஈபா" (2/392) எனும் நூலில்: உபைதுழ்ழாஹ்வை சரிகண்டு அப்துழ்ழாஹ் என்பது பிரதிபண்ணியவ ரால் ஏற்பட்ட தவறு எனக் கூறியுள்ளார்.

எனினும் அவர் சரிபடுத்தியதற்கும் பிழையெனக் கூறியதற்கும் ஆதாரம் கூறவில்லை. ஆதாரமின்றி ஒன்றை சரியெனவோ அல்லது பிழையெனவோ ஏற்கமுடியாது என்பது அவருக்கே தெரிந்த விடயம்.

மேலும் அபூ இஸ்ஹாக் அல் ஹர்பீ رحمه الله வின் ஆசிரியர்களை ஆராய்ந்து பார்த்தால் அவர்களில் அபூம.்.மர் அப்துழ்ழாஹிப்னு அம்ர் - "ஸியரு அ.்.லாமின் நுபலா" : (10/622), எண்: (214). - உபைதுழ்ழாஹிப்னு உமர் - "ஸியரு அ.்.லாமின் நுபலா": (11/442), எண்: (102). - என ஆதாரம் கொள்ளத் தக்கவர்களான இரு உறுதியான ஆசிரியர்கள் உள்ளார்கள். இவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவருமே ஒரே காலத்தையும் நாட்டையும் சார்ந்தவர்கள். இவர்கள் இருவருமே ஹதீஸ்கலையில் உறுதியும் பலமும் மிக்கவர்கள் என்பதனால் இவர்களின் பெயர்களில் கருத்து வேற்றுமை இருந்தாலும் அது கவனிக்கப்படமாட்டாது. ஏனெனில் இருவரில் எவரை எடுத்துக் கொண்டாலும் அவர் உறுதியானவரே, இதற்கு மாற்றமாக ஒருவர் உறுதியானவராகவும் அதே பெயருடைய மற்றவர் பலவீன மாகவும் இருந்தால் தான் பிரச்சினை உண்டாகிறது. இதனைப்பற்றி இமாம் நவவீ رحمه الله அவர்கள் "ஸஹீஹு" முஸ்லிமி"ற்கு விரிவுரையாக எழுதிய "அல்மின்ஹாஜ்": (13/174) எனும் தனது நூலில், அப்துழ்ழா ஹிப்னு க.்.பா? அல்லது அப்துர்ரஹ்மானிப்னு க.்.பா? எனக்கருத்து வேற்று மையுள்ள "ஸஹீஹு"முஸ்லிமின்" ஒரு அறிவிப்பைப் பற்றிக்கூறும் போது: لايضر الشك في الراوي إذا كان الشك بين ثقتين . "இரு உறுதியான வர்களுக்கு மத்தியில் (இருவரில் யார் என) சந்தேகம் எழுந்தால் அது (அவர்கள் இருவருமே உறுதியானவர்கள் எனும் காரணத்தினால்) எவ்விதத்தீங்கையும் விளைவிக்காது". எனக் கூறியுள்ளார்கள்.

## (2) யூனுஸ்"ப்னு புகைர் அல் கூபீ.

இவர் சரித்திரக் கலையின் மாமேதையாவார். எனினும் ஹதீஸ் கலையில் இவரின் தரம் பற்றிக் கருத்து வேற்றுமைகள் உள்ளன. இவரைப் பற்றிக் கூறிய அனேகமான " அல் ஜர்ஹு" வத்த.்.தீல் " (الجرح والتعديل) எனும் அறிவிப்பாளர்களின் தரங்களை நிர்ணயிக்கும் உலமாக்கள் : " صدوق يخطئ " இவர் ஹதீஸ் கலையில் ஒரு உண்மையான வர் எனினும் ஹதீஸ்களில் பிழைப்பவர் எனக் கூறியுள்ளார்கள்.

"அல் அஜ்ஸாஉல் ஹதீஸிய்யா": (ப/179, 180).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரைப் பற்றிக் கூறப்பட்டிருப்பவைகளில் சில வருமாறு:

1. (ليس يونس بحجة) யூனுஸ் ஆதாரம் கொள்ளத் தக்கவரல்லர்.

(இமாம் அபூதாவூத், இமாம் தகபீ رحمهما الله).

"தல்கீஸுல் முஸ்தத்ரக்" : (1/495), எண் : (1274).

"அல் காஷிப்" : (3/289), எண் : (6551).

"அல் முஃனீ பில் ழுஅபா" : (2/562), எண் : (7262).

2. (ثقة إلا أنه يتشيّع) யூனுஸ் உறுதியானவர், என்றாலும் ஷீஆக் கொள்கையுள்ளவர்.

(இமாம் இப்னு ஷாஹீன் رحمه الله).

"அத்தாரீக்" : (ப/259).

3. (ثقة إلا أنه مرجئي) யூனுஸ் உறுதியானவர், என்றாலும் முர்ஜிஆக்களின் கொள்கையுள்ளவர்.

(இமாம்யஹ்யப்னு மஈன் رحمه الله).

"அல் முஃனீ பில்ழுஅபா" : (2/562), எண்: (7262).

"ஸியரு அஃலாமின் நுபலா" : (9/247), எண்: (71).

4. (وليونس بن بكير غير ماذكرت من الغرائب وغيره) யூனுஸுப்னு புகைரிற்கு நான் கூறாத இன்னும் பல (நூதனமான) அபூர்வமான, இன்னும் அபூர்வமல்லாத ஹதீஸ்கள் இருக்கின்றன. என இமாம் இப்னு அதீ رحمه الله அவர்கள் இவருககுரிய பல அபூர்வமான ஹதீஸ் களைக் கூறிவிட்டு தனது "அல் காமில் பில் ழுஅபா" (8/526), எண்: (2084) ல் கூறியுள்ளார்கள்.

5. (صدوق يخطئ) இவர் ஹதீஸ்களில் பிழைக்கும் ஓர் உண்மையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஹாபிழ் இப்னு ஹஜர் رحمه الله).

"தக்ரீபுத் தஹ்தீப்": (2/686), எண்: (8183).

இவ்வாறு ஹதீஸ்களில் தவறிழைப்பவராகவும், ஷீஆக் கொள்கையுடையவராகவும், அபூர்வமான ஹதீஸ்களை அறிவிப்பவராகவும் இருக்கும் ஒரு அறிவிப்பாளரின் ஹதீஸ் அவரல்லாத இன்னுமொருவரின் மூலம் அறிவிக்கப்படாவிட்டால் பலவீனமாகக் கணிக்கப்படும்.

"ஹத்யுஸ் ஸாரீ": (ப/384).

"அந்நுகத் அலப்னிஸ் ஸலாஹ்": (1/438 - 440).

## அல்பானியும் யூனுஸுப்னு புகைரும்.

அல்பானி தனது " அஸ்ஸில்ஸிலதுல் ழஈபா " (2/392) ல்:

يونس ثقة من رجال مسلم "யூனுஸ் உறுதியானவர், ஸஹீஹு" முஸ்லிமின் அறிவிப்பாளர்களில் உள்ளவர்" எனக் கூறியுள்ளார். இவரின் இவ்வார்த்தை இரு விதத்தில் தவறாகும்.

(1) பொதுவாகவே யூனுஸை உறுதியானவர் எனக் கூறியது, ஏனெனில் அறிவிப்பாளர்களைத் தரப்படுத்தும் உலமாக்களில் மிக முக்கியமானவர்களின் கூற்றுக்களில் யூனுஸ் உறுதிமிக்கவர் எனப் பொதுவாகக் கூறப்படவில்லை. மாறாக "உண்மையாளர் என்றாலும் , ஹதீஸ்களில் தவறிளைப்பவர்" என்றும், "உறுதி மிக்கவர் எனினும் ஷீஆக் கொள்கையுள்ளவர்....." என்றுமே கூறப்பட்டுள்ளது. இவ்வாறு இன்னுமொரு பலவீனப்படுத்தும் காரணத்துடன் சேர்த்து புகழ்ந்து கூறப்பட்டிருக்கும் போது அல்பானி இவரைப் பற்றி மேற்படி பலவீனமாக்கும் காரணிகளை மறைத்து பொதுவாகவே உறுதிமிக்கவர் எனக் கூறுவது தவறானதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் அல்பானி தனது "ழஈபா" (3/68), எண்: (1011) ல்: "இவர் பிழைப்பவரே" எனத் தெளிவாகக் கூறியிருப்பதும் இங்கு குறிப் பிடத்தக்கதே.

"ஸஹீஹு ஸிபதி ஸலாதின் நபிய்யி ﷺ": (ப/190).

(2) யூனுஸை ஸஹீஹு முஸ்லிமின் அறிவிப்பாளர்களில் உள்ளவர் எனப்பொதுவாகக் கூறியது. யூனுஸை இவ்வாறு பொதுவாகவே "ஸஹீஹு முஸ்லிமின் அறிவிப்பாளர்களில் உள்ளவர்" எனக் கூறமுடியுமென்றிருந்தால் இமாம் தஹபீ رحمه الله அவர்கள் தங்களின் "ஸியரு அஃலாமின் நுபலா" (9/245), எண்: (71)ல்: "இவர் புகாரி யின் தஃலீக் (تعليق) எனப்படும் துணைச் சான்றுகளாகக் கூறப் படும் ஹதீஸ்களின் அறிவிப்பாளராவார்" எனச் சுட்டிக்காட்டியுள் ளதால் இவரை புகாரியினுடைய அறிவிப்பாளர் எனவும் கூற முடியுமே.

இவ்வாறு மூலாதாரங்களல்லாது துணைச்சான்றுகளான ஹதீஸ் களின் அறிவிப்பாளர்கள் பற்றிக் கூறும் போது "இவர் புகாரி முஸ்லி மின் அறிவிப்பாளர்" எனப் பொதுவாகக் கூறமுடியாது. மாறாக தஃலீக் (تعليق), ஷவாஹித் (شواهد), முதாபஅத் (متابعة) போன்ற துணைச் சான்று ளாகக் கூறப்படும் ஹதீஸ்களின் அறிவிப்பாளர் எனக் குறிப்பிட்டுக் கூறுவது அவசியமாகும்.

இப்போது அல்பானி கூறுவதைப் போன்று அவர் முஸ்லிமின் மூலாதார ஹதீஸ்களின் அறிவிப்பாளரா? என நாம் ஆராய்வோம்.

இமாம் தஹபீ رحمه الله அவர்கள் தங்களின் "ஸியரு அஃலாமின் நுப லா" வில் யூனுஸ் புகாரியின் தஃலீக் எனும் துணையாதார ஹதீஸின் அறிவிப்பாளர் என சாடை செய்துவிட்டு قد روى له مسلم في الشواهد لا الأصول "இவரின் மூலம் இமாம் முஸ்லிம் رحمه الله அவர்கள் தங்களின் நூலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலாதாரமல்லாத "ஷவாஹித்" (شواهد) எனும் துணைச் சான்றான ஹதீஸ்களைத்தான் அறிவிப்புச் செய்துள்ளார்கள்". எனக் கூறியுள் ளார்கள்.

"ஸியரு அ∴லாமின் நுபலா" : (9/248), எண்: (71).

"அல் காஷிப்" : (3/289), எண்: (6551).

"அல் மு∴னீ பில் ழுஅபா" : (2/562), எண்: (7262).

## 3. அல் ஹைஸமுப்னு இம்றான் அல் அபஸீ.

இவரைப்பற்றி இமாம் இப்னு ஹிப்பான் رحمه الله அவர்கள் தங்களின் "அஸ்ஸிகாத்" (7/577) ல்:

من أهل دمشق ، يروي عن عطية بن قيس ، روى عنه الهيثم بن خارجة .

"இவர் திமஷ்க்கைச் சார்ந்தவர். இவர் அதிய்யதுப்னு கைஸிடமிருந்து ஹதீஸ்களை அறிவித்துள்ளார். மேலும் இவரிடமிருந்து அல்ஹைஸமுப்னு காரிஜா என்பவர் அறிவிக்கின்றார்". எனக் கூறியுள்ளார்கள்.

இன்னும் இமாம் இப்னு அபீஹாதிம் رحمه الله அவர்கள் தங்களின் "அல் ஜர்ஹு வத்த∴தீல்": (9/103), எண்: (15990)ல் இவரைப்பற்றிக் கூறும் போது புகழ்ந்தோ அல்லது இகழ்ந்தோ எதனையும் கூறாமல்:

روى عنه محمد بن وهب بن عطية ، وهشام بن عمار ، وسليمان بن شرحبيل .

"இவரிடமிருந்து முஹம்மதுப்னு வஹபிப்னி அதிய்யாவும், ஹிஷாமுப்னு அம்மாரும், ஸுலைமானுப்னு ஷுரஹ்பீலும் (ஹதீஸ்களை) அறிவித்துள் ளனர்" எனக் கூறியுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே இமாம் பஸவீ رحمه الله அவர்களின் "கிதாபுல் ம.:.ரிபதி வத்தாரீக்" (2/403) எனும் நூலிலும் இவரைப்பற்றி எவ்வித புகழோ அல்லது இகழ்வோ கூறப்படவில்லை.

இவ்வாறு ஒருவரைப் பற்றி அவரின் பெயரைத் தவிர வேறு நன்மையோ கெடுதியோ கூறப்படாவிட்டால் அவருக்கு ஹதீஸ்கலை மூலவிதானத்தில் "மஸ்தூர்" (مستور), "மஜ்ஹூலுல் ஹால்" (مجهول الحال) அதாவது ஆள் அறியப்பட்டு அவரின் நிலமை அறியப்படாதவர் எனக் கூறப்படும்.

மேற்கூறப்பட்ட இமாம்களின் கூற்றுக்களிலிருந்து அல்ஹைஸமுப்னு இம்றானின் மூலமாக அவரின் மாணவர்களாகிய

1. முஹம்மதுப்னு வஹபிப்னி அதிய்யா.
2. ஹிஷாமுப்னு அம்மார்.
3. ஸுலைமானுப்னு ஷுரஹ்பீல்.
4. அல் ஹைஸமுப்னு காரிஜா.
5. யூனுஸுப்னு புகைர். (இவரோ "மாக்குலைப்பவனைப் போன்று கையை ஊன்றி எழும்புவார்கள்" எனும் ஹதீஸில் ஹைஸமுப்னு இம்றானின் மாணவராவார்.)

போன்ற ஐவர் அறிவித் ததினால் இவர் (مجهول العين) "மஜ்ஹூலுல் அய்ன்" எனப்படும் "ஆளே அறியப்படாதவர்" எனும் பலவீனர்களின் பட்டியலிலிருந்து நீங்கினாலும் "மஜ்ஹூலுல் ஹால்" (مجهول الحال) எனப்படும் "ஆள் அறியப்பட்டு அவரின் நிலை அறியப்படாதவர்" எனும் பட்டியலை விட்டும் நீக்கப்படமாட்டார். இதுவே பெரும்பான்மையான உலமாக்களின் கருத்தாகும்.

ஆனால் இமாம் இப்னு ஹிப்பான் رحمه الله அவர்களும் அவர்களின் ஆசிரியரான இமாம் இப்னு குஸைமா رحمه الله அவர்களும் பெரும்பான்மையான உலமாக்களுக்கு மாற்றமாக ஆள் அறியப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் நிலை அறியப்படாதோர் (மஜ்ஹூலுல் ஹால்) களின் அறிவிப்புக்கள் அவர்களிடமிருந்து உறுதியான ஒருவர் அறிவித்தால் ஏற்றுக் கொள்ளப்படும் எனக் கூறியுள்ளார்கள்.

இவ்விருவரின் கூற்றும் பெரும்பாலான உலமாக்களின் கருத்தாகிய "மஜ்ஹூலுல் ஹால்" களான ராவிகளை நம்பகமான ஒருவர் அல்லது பலர் உறுதிமிக்கவர்கள் எனத் தெளிவாகக் கூறினா லேயே ஏற்றுக் கொள்ளப்படும் என்பதற்கு மாற்றமாக இருப்பதனால் இதனை பல உலமாக்களும் எதிர்த்தனர். அவர்களின் பெயர்களும் ஆதார நூல்களும் வருமாறு:

1. ஹாபிழ் இப்னு ஹஜர் அல் அஸ்கலானீ رحمه الله .

"லிஸானுல் மீஸான்": (1/107) (1/614), எண்: (1535).

2. இமாம் இப்னு அப்தில் ஹாதீ رحمه الله .

"அஸ்ஸாரிமுல் முன்கீ": (ப/139).

3. இமாம் ஸகாவீ رحمه الله .

"பத்ஹுல் முகீஸ்": (2/62, 63).

4. அஷ்ஷெய்க் அம்ர் அப்துல்முன்இம்.

"தய்ஸீரு திராஸதில் அஸானீதிலில் முப்ததிஈன்": (ப/133).

5. அஷ்ஷெக் நாஸிருத்தீன் அல்பானி.

"ஸில்ஸிலதுல் அஹாதீஸில் ழஈபா": (2/328, 329), எண்: (929).

"இர்வாஉல் ஙலீல்": (3/360), எண்: (861).

## அல்பானியும் அல்ஹைஸமும் இப்னு இம்றானும்.

மேற்கூறப்பட்ட உலமாக்களின் கூற்றுக்களின் மூலம் அல்ஹை ஸம் நிலை அறியப்படாத பலவீனர்களைச் சார்ந்தவர் என்பது புலனாகிறது. இப்படிப்பட்டவர்களிடமிருந்து ஒரு உறுதியானவர் அறிவித் தால் அவரின் ஹதீஸ் ஏற்றுக்கொள்ளப்படும் எனக் கூறியவர்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலரும் மறுத்துள்ளனர். இச்சிறுபான்மையினரின் கூற்றை மறுத்தவர்களில் அல்பானியும் ஒருவர் என்றாலும் அவரின் இந்தக் கூற்றுக்கு மாற்றமாக அவரே அவரின் (இச்சிறுபான்மையினரின் கூற்றை எதிர்த்த அதே நூலாகிய) "அஸ்ஸில்ஸிலதுல் ழஈபா": (2/392)ல் பேசியுள்ளார்.

இவ்வாறு தனக்குத்தானே மாற்றமாகப் பேசிக் கொள்வது, முன்னுக்குப் பின் முரணாக எழுதுவது அல்பானிக்கு ஒன்றும் புதிதல்ல, மாறாக இது அவரின் பிறவிக்குணமும் அனேகமாக நடைபெறும் ஒரு விடயமுமாகும். ஆகையால்தான் அஷ்ஷெய்க் ஹஸனுப்னு அலீ அஸ்ஸக்காப் அவர்கள் இவ்வாறாக அல்பானி தனக்குத்தானே முன்னுக்குப்பின், இடத்துக்கு இடம் மாற்றமாகப் பேசிக் கொள்ளும் விடயங்களை ஒன்று சேர்த்து மூன்று பாகங்களில் "தனாகுழாத்துல் அல்பானீ அல்வாழிஹாத்" ( تناقضات الألباني الواضحات ) எனும் நூலையே எழுதியுள்ளார்கள்.[4]

அல்பானி அல்ஹைஸமுப்னு இம்றானைப் பற்றிக் கூறும் போது முதலில் (மேலே கூறப்பட்ட) இமாம் இப்னு ஹிப்பான், இன்னும் இப்னு அபீஹாதிம் رحمهما الله வின் கூற்றுக்களை கூறிவிட்டு :

**"(முஹம்மதுப்னு வஹப், ஹிஷாமுப்னு அம்மர், ஸுலைமானுப்னு ஷுரஹ்பீல் போன்ற) உறுதியான இம்மூவரும், மேலும், ஹைஸமுப்னு காரிஜா, யூனுஸுப்னு புகைர் போன்றோரும் ஹைஸமிடமிருந்து அறிவிப்பது ஹைஸமின் ஹதீஸ்களை உள்ளம் ஏற்கக் காரணமாக அமைகின்றது. ஏனெனில் இவரின் ஹதீஸ்களில் ஏதாவது ஒரு பலவீனமிருந்தால் இவ்வுறுதியான மூவரில் ஒருவரின் அறிவிப்பின் மூலம் அது தெளிவாகியிருக்கும். இன்னும் இமாம் இப்னுஹிப்பான், இப்னுஅபீஹாதிம் رحمهما الله போன்ற முஹத்திஸ்கள் அறிந்திருப்பார்கள் (மேலும் அதனை விளக்கியுமிருப்பார்கள் ) அத்தோடு இவரின் இந்த (மாக்குலைப்பவனைப் போன்று கையைப் பூமியிலூன்றி எழுவார்கள் எனும்) ஹதீஸிற்கு துணையாக ஹம்மாதுப்னு ஸலமாவின் ஹதீஸும் வந்துள்ளது." எனக் கூறியுள்ளார்.**

**"ஸில்ஸிலதுல் அஹாதீஸில் ழஈபா": (2/392).**

---

[4]. இந்நூல் பற்றி முன்னுரை (ப/19,20)ல் சென்று விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு அல்பானி கூறியது பலவித்திலும் தவறாகும்.

1. இவ்விடத்தில் அல்பானி இமாம் இப்னு ஹிப்பான் رحمه الله அவர்களின் மத்ஹபின்படி இந்த அறிவிப்பாளரை ஏற்றுள்ளார். இக்கருத்தை எதிர்த்தெழுதிய பலரின் பெயர்களையும் நாம் மேலே பார்த்தோம். அவர்களில் அல்பானியும் ஒருவர். மேலும் அவர் இவ்வாறான அறிவிப்பாளர்களின் நிலமை பற்றி தனது "ஸில்ஸிலதுல் ழஈபா": (2/286), எண்: (881) ல்: அல் ஹாரிஸுப்னு அம்ரைப் பற்றிக் கூறும்போது:

انه لاتقبل روايتهم مالم تثبت عدالتهم، وتثبت العدالة بتنصيص عدلين عليها......

"ஹாரிஸ் இன்னும் அவர் போன்றோரின் அறிவிப்புக்கள் அவர்களின் நம்பகத்தன்மை, நேர்மை உறுதியாகப் புலப்படும் வரை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஒருவரின் நம்பகத்தன்மை நேர்மையான இருவரால் அவர் நேர்மையானவரே எனத் தெளிவாகக் கூறுவதனாலேயே உறுதியாகும்". எனக் கூறியுள்ளார்.

இவ்வாறே ஆள் அறியப்பட்டு அவரின் நேர்மை அறியப்படாதோர்களின் அறிவிப்புக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மேலும் இப்படிப்பட்டவர்களை உறுதியான இருவர் நேர்மையானவர்கள் எனத் தெளிவாகக் கூறும் வரை அவர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக உறுதி செய்யப்படமாட்டார்கள் என தனது பல நூல்களிலும் தெளிவாகக் கூறிய இதே அல்பானியால் ஹைஸமுப்னு இம்றானும் அவ்வாறான நிலை அறியப்படாத அறிவிப்பாளர்களில் ஒருவராக இருக்கும் போது ஏன் இவரின் ஹதீஸை பலவீனமாக்க முடியாது? அவரின் கொள்கைக்கு மாற்றமாக வரும் ஹதீஸ்களில் மட்டும் இந்த சட்டமில்லை என்பது அவரின் மத்ஹபோ?!!

2. ஹைஸமிடமிருந்து ஐவர் ஹதீஸ் அறிவித்துள்ளனர் என்பதனை அடிப்படையாக வைத்து ஹைஸமுடைய ஹதீஸ்கள் உள்ளம் ஏற்கக்கூடிய (பலமான், தரமான) நிலையில்தான் உள்ளன என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்பானி தீர்ப்புக் கூறியதாகும். ஏனெனில் உள்ளம் ஏற்பது அல்லது ஏற்காமலிருப்பதன் மூலம் ஒரு ஹதீஸை ஸஹீஹாகவோ அல்லது ழஈபாகவோ ஆக்கப்பட முடியாதது போல், ஒரு அறிவிப்பாளரையும் உறுதியானவர் அல்லது பலவீனமானவர் என முடிவு செய்ய முடியாது.

3. இந்த ஹதீஸுக்குத் துணையாக ஹம்மாதுப்னு ஸலமாவின் ஹதீஸும் வந்துள்ளது என்று அல்பானி கூறியதாகும். அல்பானி துணையானது எனக் குறிப்பிட்ட ஹதீஸை இமாம் பைஹகீ رحمه الله அவர்கள் தங்களின் "அஸ்ஸுனனுல் குப்றா" (2/194) எண் : (2806) ல் ஹதீஸ்களையில் "மௌகூப்" (موقوف) [5] எனப்படும் பிரிவைச்சார்ந்த அப்துழ்ழாஹிப்னு உமர் رضي الله عنهما அவர்களின் செயல்பற்றி அறிவித் துள்ளார்கள். அந்த ஹதீஸின் அறபிவார்த்தையும், மொழி பெயர்ப்பும் வருமாறு:

حماد بن سلمة عن الأزرق بن قيس قال : " رأيت إبن عمر – رضي الله عنهما – إذا قام من الركعتين إعتمد على الأرض بيديه ، فقلت لولده ولجلسائه : لعله يفعل هذا من الكبر ، قالوا : لا ، ولكن هكذا يكون ."

**அல் அஸ்ரகுப்னுகைஸ் رحمه الله அவர்கள் கூறுகின்றார்கள்: "அப்துழ்ழா ஹிப்னு உமர் رضي الله عنهما அவர்கள் இரண்டாவது ரக்அத்திலிருந்து எழும்பும்போது தங்களின் கைகளைப் பூமியின் மீது ஊன்றி எழுவதை நான் பார்த்து, அவர்களின் பிள்ளைகள் இன்னும் அவர்களின் நண்பர் களிடம் இவ்வாறு (கைகளைப் பூமியில் ஊன்றி எழுவதை) அவர்கள் வயோதிபத்தின் காரணமாகத்தான் செய்கின்றார்கள் போலும்? எனக்**

---

[5]. நபி ﷺ அவர்கள் சம்பந்தப்படாமல் வெறும் ஒரு ஸஹாபி சம்பந்தப்பட்ட சொல், செயல், அங்கீகாரமாக இருந்தால் அதற்கு "மௌகூப்" எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினேன். அதற்கவர்கள் : இல்லை (வயோதிபத்தினால் இவ்வாறு செய்யவில்லை, மாறாக) இவ்வாறுதான் செய்ய வேண்டும் எனக் கூறினார்கள்".

இந்த ஹதீஸைப் பற்றி அல்பானி கூறுகையில் :

هذا إسناده جيد ، رجاله ثقات كلهم ، فقوله " هكذا يكون " صريح في أنّ ابن عمر رضي الله عنهما

كان يفعل ذلك إتّباعا لسنة الصلاة وليس لسن أوضعف .

இந்த அறிவிப்பாளர் தொடர் சிறந்தது, இந்தத் தொடரில் உள்ளவர்கள் அனைவருமே உறுதிமிக்கவர்கள். மேலும் "இவ்வாறு தான் செய்யவேண்டும்" எனும் வார்த்தை இப்னு உமர் رضي الله عنهما அவர்கள் இச் செயலை தொழுகையின் ஸுன்னத்தைப் பின்பற்றும் நோக்குடனேயே செய்பவர்களாக இருந்தார்கள் என்பதையும், வயோதிபம் அல்லது இயலாமையினால் இவ்வாறு செய்யவில்லை என்பதையும் தெளிவுபடுத்துகின்றது. எனக் கூறியுள்ளார்.

"ஸில்ஸிலதுல் அஹாதீஸில் ழஈபா": (2/392).

ஆனாலும் இமாம் பைஹகீ رحمه الله அவர்களின் ஹதீஸ், கைகளைப் பூமியிலே ஊன்றுவது பற்றிக் கூறுகின்றதே தவிர கைகளை மாக்குலைப்பவனைப் போன்று பூமியில் ஊன்றினார்கள் என்பதைக் கூறவில்லை. எனவே இந்த ஹதீஸ் அல்பானியின் வாதத்திற்கு எவ் வகையிலும் சான்றாக அமையாது. மேலும் கைகளைப் பூமியில் ஊன்றி எழுவது பற்றி இதனையும்விட பலமான ஹதீஸ்கள் நபி ﷺ அவர்களின் செயல் மூலமே அறிவிக்கப்பட்டுள்ளது என்பது இவ்விடம் குறிப்பிடத்தக்கது. இங்கு நாம் அதைப் பற்றி ஆராய வேண்டிய அவசியமில்லை, ஏனெனில் நாம் இவ்விடத்தில் மாக்குலைப்பவனைப் போன்று கைகளைப் பூமியில் ஊன்றுவது பற்றியே ஆராய்ந்து வருகின்றோம். அந்த வகையில் இமாம் பைஹகீ رحمه الله அவர்களின் மேற்கூறப்பட்ட ஹதீஸோ இவ்விடத்தில் எமது ஆய்விற்கு அப்பாற்பட்டதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே அல்பானியின் தரப்புக்கு இந்த ஹதீஸ் எந்தவொரு பிரயோஜனத்தையும் எவ்வகையிலும் தரமாட்டாது.

அல்பானியின் இக்கடைசி வார்த்தையை ஆராய்ந்ததன் மூலம் நமக்கு இமாம் அபூ இஸ்ஹாக் அல்ஹர்பீ رحمه الله அவர்களின் "ஙரீபுல் ஹதீஸ்" (غريب الحديث) எனும் நூலில் "மாக்குலைப்பவனைப் போன்று" கைகளைப் பூமியில் ஊன்றி எழுவது பற்றிக் கூறப்பட்ட ஹதீஸ் அதற்கு எந்தவொரு துணையுமின்றி ஒரே ஒரு அறிவிப்பாளர் தொடர் மூலம் அறிவிக்கப்படும் "ஙரீப்" (غريب) எனப்படும் வகையைச் சார்ந்ததாகும் எனத் தெளிவாகி விட்டது. இந்த ஙரீபான அறிவிப்பாளர் தொடரைப் பற்றியே இங்கு நாம் ஆராய்ந்து வருகின்றோம்.

குறிப்பு : இங்கு நாம் ஆள் அறியப்பட்டு அவரின் நிலை அறியப்படாத "மஜ்ஹூலுல் ஹால்" (مجهول الحال) எனப்படும் அறிவிப்பாளர்களின் விடயத்தில் ஹனபி இன்னும் ஏனைய மத்ஹபுகளுக்கு மத்தியிலுள்ள ஒரு கருத்துவேற்றுமையை அறிந்து கொள்ளவேண்டும். அதாவது இவ்வாறான அறிவிப்பாளர்கள் தாபியீன்களாக இருந்தால் அவர்களுடைய ஹதீஸ்களை ஹனபி மத்ஹபைச் சார்ந்தோர் ஏற்றுக் கொள்வார்கள். எனினும் ஏனைய மத்ஹபுகளைச் சார்ந்தவர்கள் அவ்வாறான அறிவிப்பாளர்கள் தாபிஈன்களாக இருப்பினும் அவர்களின் ஹதீஸ்களை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். ஆனால் தாபிஈன்களுக்கு அடுத்து வரும் அறிவிப்பாளர்களில் யாராவது (مجهول الحال) "மஜ்ஹூலுல் ஹால்"ஆக இருப்பின் அவர்களின் ஹதீஸ்கள் ஹனபி மத்ஹபைச் சார்ந்தோர்களிடத்திலும் ஏற்றுக்கொள் ளப்படமாட்டாது.

"கப்வுல் அஸர் பீஸப்வி உலூமில் அஸர்": (ப/86).

(இமாம் ரழிய்யுத்தீன் இப்னுல் ஹம்பலி رحمه الله ).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அத்தக்ரீரு வத்தஹ்பீர்": (2/325).

(இமாம் இப்னு அமீரில் ஹாஜ் رحمه الله).

"கவாஇது பீ உலூமில் ஹதீஸ்"ள: (ப/207).

(அல்லாமா ளபர் அஹ்மத் அல் உஸ்மானீ رحمه الله ).

இதனடிப்படையில் இந்த ஹதீஸ் ஹனபி மத்ஹபைச் சார்ந்தவர் களிடத்திலும் மேலும் ஏனையவர்களிடத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தல்ல ஏனெனில் இந்த அறிவிப்பாளர் தொடரில் வந்துள்ள அல்ஹை ஸமுப்னு இம்றான் என்பவர் (تبع التابعين) "தபஉத்தாபிஈன" களைச் சார்ந்த ஆள் அறியப்பட்டு அவரின் நிலை அறியப்படாதவ ராவார். இமாம் இப்னுஹிப்பான் رحمه الله அவர்கள் தங்களின் "அஸ்ஸி காத்" (4/361) ல்:

باب الهاء : ومن أتباع التابعين الذين رووا عن التابعين ممن ابتدأ اسمه على الهاء .

"தாபிஈன்களிடமிருந்து அறிவிக்கும் தபஉத்தாபிஈன்களில் முதல் எழுத்து (ه) "ஹா" வின் மூலம் ஆரம்பமாகுபவர்கள்" எனும் தலைப் பின் கீழ் இவரைப்பற்றிக்கூறி இவர் தபஉத்தாபிஈன்களைச் சார்ந்தவர் எனத் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

ஆகையால் நான்கு மத்ஹபுகளைச் சார்ந்த அனைவரிடமும் இந்த ஹதீஸ் ஏற்க முடியாதது என்பது தெளிவாகின்றது.

## 4. அதிய்யதுப்னு கைஸ்.

இவரைப் பற்றி ஹாபிழ் இப்னு ஹஜர் رحمه الله அவர்கள் கூறும் போது: "இவர் உறுதியானவர்" எனக் கூறிய தோடு, இவர் "ஸஹீஹு முஸ்லிமின்" அறிவிப்பாளர்களிலுமுள்ளவர் எனவும் சுட்டிக்காட்டியுள் ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தக்ரீபுத் தஹ்தீப்": (1/404), எண்: (4760).

இவர் "ஸஹீஹு"முஸ்லிமின்" மூலாதார ஹதீஸ்களின் அறிவிப் பாளர் என்பதனால் இவரைப்பற்றி ஆராயவேண்டிய அவசியமில்லை.

## 5. அல் அஸ்ரகுப்னு கைஸ்.

இவரைப் பற்றி ஹாபிழ் இப்னு ஹஜர் رحمه الله அவர்கள் "இவர் உறுதியானவர்" எனக்கூறியதோடு, இவர் "ஸஹீஹு"ல் புகாரியின்" மூல ஹதிஸ்களின் அறிவிப்பாளர் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

"தக்ரீபுத்தஹ்தீப்": (1/38), எண் : (330).

ஆகையால் இவரைப்பற்றியும் ஆராய வேண்டியதில்லை.

இவ்வாய்வில் இந்த அறிவிப்பாளர் தொடரை ஆராய்ந்ததனால் அதிலே யூனுஸு"ப்னு புகைர் இன்னும் அல் ஹைஸமுப்னு இம்றான் எனும் சர்ச்சைக்குரிய இரு அறிவிப்பாளர்கள், உள்ளார்கள் என்பதன் மூலம் இந்த ஹதீஸ் பலவீனமானது, ஆதாரம் கொள்ளத் தக்கதல்ல என்ற முடிவுக்கு வரலாம். வரும் ஆய்வில் இமாம்கள் இதனைப் பற்றி என்ன கூறுகிறார்கள் என்பதைப்பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வு – (3) : இந்த ஹதீஸின் தரம்.

இந்த ஹதீஸின் தரம் பற்றி விளக்குகையில் சாபிஈமத்ஹபைச் சார்ந்த இப்னுஸ்ஸலாஹ், நவவீ, ஹாபிழ் இப்னு ஹஜர் رحمهم الله ஆகிய இமாம்களின் கூற்றுக்களே விஷேசமான தாகும். அவர்களின் கூற்றுக் கள் வருமாறு.

### 1. இமாம் இப்னுஸ்ஸலாஹ் رحمه الله அவர்களின் கூற்று.

இப்னுஸ்ஸலாஹ் رحمه الله அவர்கள் "அல்வஸீத்" எனும் நூலுக்கு எழுதிய விரிவுரையிலிருந்து இமாம் இப்னுல் முலக்கின் رحمه الله அவர் கள் தங்களின் "குலாஸதுல் பத்ரில் முனீர்" (خلاصة البدر المنير) எனும் நூலில் இமாம் இப்னுஸ்ஸலாஹ் رحمه الله அவர்கள் கூறியதாக எடுத்தெழு துகையில்: هذا الحديث لايعرف ولايصح ولايجوز أن يحتج به .

"இந்த ஹதீஸ் அறியப்படாத, ஸஹீஹல்லாத (பிழையான) ஆதாரம் எடுக்கக்கூடாத ஹதீஸாகும். இன்னும் இமாம் கஸாலீ رحمه الله அவர்கள் தங்களின் பாடவகுப்பில் "மாக்குலைப்பவனைப் போன்று" என்றால்: இரு கைகளினதும் விரல்களை மடித்துப் பொத்தி அதனைக் கீழே வைத்து ஊன்றி எழும்புவதாகும் எனக்கூறிவிட்டு: இது ஷாபிஈ மதஹபில் இந்த மஸ்அலாவின் இரண்டாவது விதமாகும் (முதலாவது விதம் உள்ளங்கைகளைப் பூமியில் ஊன்றி எழுவதாகும்) எனக் கூறினார்கள். இதனைக் கொண்டு மிகுதமான அஜமிகளும் அஜமி அல்லாதோரும் அமல் செய்துள்ளனர். அவர்களின் இந்த செய்ல் முறைக்கும், ஆதாரமற்ற இந்த ஹதிஸுக்கும் எவ்வித சம்பந்தமு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மில்லை. அவ்வாறு அது உறுதியானதாக இருந்தாலும் "அல்ஆஜின்" (மாக்குலைப்பவன்) எனக் கூறப்பட்டது ஒரு வயது முதிர்ந்த மனிதனுக்கு ஒப்பாகவேயாகும், ஏனெனில் அவர் எழும்பும்போது பூமியில் வயோதிபத்தினால் கைகளை ஊன்றி எழுகின்றார், அவ்வாறு (வயோதிபத்தினால்) எழுபவருக்கு அறபிப்பாசையில் "அல் ஆஜின்" எனக் கூறப்படும். எனவே இவ்வார்த்தையினால் இருகைகளையும் பூமியில் ஊன்றி எழுவதற்கே ஒப்பிடப்பட்டுள்ளது (மாக்குலைப்பவனைப் போன்று) இரு கைகளின் விரல்களைப் பொத்துவதற்கல்ல.

"அல்அஜ்ஸாஉல் ஹதீஸிய்யா" : (ப/193, 194).
"தல்கீஸுல் ஹபீர்" : (1/625, 626).
"இத்ஹாபுஸ் ஸாததில் முத்தகீன்" : (3/113, 114).

## 2. இமாம் நவவீ رحمه الله அவர்களின் கூற்று.

இந்த ஹதீஸைப் பற்றி இமாம் நவவீ رحمه الله அவர்கள் கூறுகையில் :

أما الحديث المذكور في " الوسيط " وغيره فهو حديث ضعيف أوباطل لا أصل له ، ولو صح كان

معناه : قائما معتمدا ببطن يديه كما يعتمد العاجز ، وهو الشيخ الكبير ، وليس المراد عاجن العجين.

"அல்வஸீத்" போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ள இந்த ஹதீஸ் பலவீனமானது, அல்லது ( باطل ) பாத்திலானது (பிழையானது). இதற்கு எந்த ஒரு அடிப்படையும் கிடையாது. இந்த ஹதீஸை (பலமானது) சரியானது என வைத்துக் கொண்டாலும் அதன் கருத்து: இயலாத வயது முதிர்ந்தவர் எழும்புவதைப் போன்று இரு கைகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்புறங்களையும் (பூமியில்) ஊன்றி எழுவதாகும் இதன் மூலம் மாக்குலைப்பவனின் தோற்றம் நாட்டமல்ல எனக்கூறியுள்ளார்கள்.

"அல் மஜ்மூஉ ஷரஹுல் முஹத்தப்": (4/581, 582).

"தல்கீஸுல் ஹபீர்" : (1/626).

"இத்ஹாபுஸ் ஸாததில்முத்தகீன்" : (3/113).

### 3. இமாம் ஹாபிழ் இப்னு ஹஜர் رحمه الله அவர்களின் கூற்று.

ஹாபிழ் இப்னு ஹஜர் رحمه الله அவர்கள் இமாம் இப்னுஸ்ஸலாஹ், நவவீ رحمهما الله ஆகிய இருவரும் கூறியவைகளைப் பூரணமாகக் கூறிவிட்டு : وقال في " التنقيح " : ضعيف باطل இமாம் நவவீ رحمه الله அவர்கள் தங்களின் அத்தன்கீஹ் (التنقيح) எனும் நுலில்: இந்த ஹதீஸ் பலவீனமானதும், (باطل) பாத்திலானதுமாகும் என்று சந்தேகமின்றிக் கூறியதையும் மேலதிகமாகக் கூறியுள்ளார்கள்.

"தல்கீஸுல் ஹபீர்" : (1/626), எண்: (392).

"இத்ஹாபுஸ்ஸாததில் முத்தகீன்" : (3/113).

### 4. இமாம் அஸ்ஸபீதீ رحمه الله அவர்களின் கூற்று.

இமாம் அஸ்ஸபீதீ رحمه الله அவர்கள் மேலேகூறப்பட்ட இமாம்களின் கூற்றுக்களைத் தங்களின் "இத்ஹாபுஸ் ஸாததில் முத்தகீன பிஷரஹி இஹ்யாஇ உலூமித்தீன்": (3/113, 114) எனும் நூலில் குறிப்பிட்டுவிட்டு அதற்கு மாற்றமாக எதனையும் கூறாமல் அதனை ஏற்றுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. அஷ்ஷெய்க் ஹஸனுப்னு அலிய்யிஸ்ஸக்காப் அவர்களின் கூற்று.

அஷ்ஷெய்க் ஹஸனப்னு அலிய்யிஸ்ஸக்காப் அவர்கள் இந்த ஹதீஸ் பற்றிக் கூறுகையில்:

أمّا حديث " كان يعجن في الصلاة ...." فحديث موضوع ، وقد نص على وضع هذا الحديث وبطلانه وأقر ذلك ثلاثة من كبار الحفاظ ، وهم الحافظ ابن الصلاح والامام النووي والحافظ ابن حجر العسقلاني كما في " التلخيص " ( 260/1 ) و"المجموع " ( 442/3 )

وقد رواه إبراهيم الحربي في " غريب الحديث " من طريق يونس بن بكير عن الهيثم عن عطية بن قيس عن الأزرق بن قيس عن ابن عمر رفعه !!

وقد أخطأ من حسّنه خطأ فادحا ، لأن الهيثم بن عمران الذي في سنده ضعيف ، وذلك لأنه لم يوثقه إلا ابن حبان ، وقد خالف الهيثم الثقات الذين وقفوا ولم يرفعوا كما لم يذكروا فيه لفظ العجن في " سنن البيهقي " ( 135/2 ) فلم يتابعوه بل خالفوه ، وهو لايحتمل هذا التفرد . والروي عنه يونس بن بكير قال عنه الحافظ في " التقريب " : صدوق يخطئ .

وهذا لاشك من جملة أخطائه ، وقد نص المتناقض !! على أنه يخطئ في " ضعيفته " ( 68/3 ) ، فالسند ضعيف حقيقة ، ولأنه مخالف لرواية الثقات التي أشرنا إليها صار باطلا كما حكم عليه الإمام الحافظ النوويّ في " المجموع " ( 442/3 ) .

இந்த ஹதீஸ் பாதிலான இட்டுக்கட்டப்பட்டதே என்று மிகப் பெரும் முஹத்திஸ்களான ஹாபிழ் இப்னுஸ்ஸலாஹ், இமாம் நவவீ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹாபிழ் இப்னுஹஜர் رحمه الله போன்றோர் ஏற்றுக்கெண்டுள்ளனர்.

இன்னும் யார் இந்த ஹதீஸை ஹஸனானது எனக் கூறினாரோ அவர் மிகவும் பிழைத்துவிட்டார். ஏனெனில் இந்த அறிவிப்பாளர் தொடரில் அல்ஹைஸமுப்னு இம்றான் எனும் பலவீனமான ஒரு அறிவிப்பாளர் உள்ளார் அவரை இமாம் இப்னு ஹிப்பான் رحمه الله அவர்களைத்தவிர வேறுயாரும் நம்பகமானவர் எனக் கூறவில்லை. “ஸுனனுல் பைஹகீ” (2/135) எனும் நூலிலோ பல உறுதிமிக்கவர்கள் “அல் அஜ்ன்” எனும் வார்த்தை இல்லாது இப்னு உமர் رضي الله عنهما அவர்களின் செயல் மூலம் இந்த ஹதீஸை அறிவிப்புச் செய்து அல்ஹைஸமுக்கு மாற்றம் செய்துள்ளனர். ஆகையால் இவர் தனிப்பட்டிருக்கும் இந்த ஹதீஸ் ஏற்றுக் கொள்ளமுடியுமானதல்ல. மேலும் அல்ஹைஸமிடமிருந்து அறிவிக்கும் யூனுஸுப்னு புகைரைப் பற்றி ஹாபிழ் இப்னு ஹஜர் رحمه الله அவர்கள்: “பிழைக்கும் உண்மையாளர்” எனக்கூறியிருப்பதுடன், தனக்குத் தானே மாற்றமாகப் பேசிக் கொள்பவரும் (அல்பானியும்) தனது “ழஈபா” (3/68)ல் இவர் பிழைப்பவரே எனவும் தெளிவாகக் கூறியுள்ளார். ஆகவே இந்த ஹதீஸ் யூனுஸின் தவறுகளில் நின்றுமுள்ளது என்பதில் எந்த சந்தேகமுமில்லை. எனவே இந்த ஹதீஸ் முந்திய முஹத்திஸ்களின் கருத்தைப் போன்று பாத்திலானதாகும். எனக் கூறியுள்ளார்கள். “ஸஹீஹு ஸிபதி ஸலாத்தின் நபிய்யி ﷺ”: (ப/190).

இவ்வாறு மிகப்பெரும் முஹத்திஸ்களின் மூலம் தீர்ப்பளிக்கப் பட்டிருக்கும் இந்த ஹதீஸுக்கு அல்பானி “ஸிபது ஸலாத்தின் நபிய்யி ﷺ”, “ஸில்ஸிலதுல் ழஈபா” போன்ற தனது நூல்களில் இந்த ஹதீஸ் “ஹஸனானது” இன்னும் “ஸாலிஹானது” எனக் கூறியிருப்பது விநோதமானதே. இவ்வாறான மிகப் பெரும் முஹத்திஸ்களுக்கு நேர்மாற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகப் பேசியிருப்பதே அல்பானி போன்றோரின் கருத்துக்களைத் தூக்கி எறிவற்குப் போதுமானதாகும்.

எனவே இதுவரை கூறப்பட்ட அடிப்படையில் இந்த ஹதீஸிற்கு "ஙரீப்" (غريب) இன்னும் "முன்கர்" (منكر) எனத் தீர்ப்புக் கொடுக்கப் படும். "ஙரீப்" என்பது தெளிவானதே, ஏனெனில் இந்த ஹதீஸுக்கு இமாம் அபூஇஸ்ஹாக் அல்ஹர்பீ رحمه الله அவர்களின் நூலாகிய "ஙரீபுல் ஹதீஸ்" (غريب الحديث) எனும் நூலிலே இருக்கும் அறிவிப்பாளர் தொ டரைத் தவிர வேறு எந்தவொரு அறிவிப்பாளர் தொடரும் இல்லா ததினாலும், இன்னும் "அல்ஆஜின்" எனும் வார்த்தை வேறு எந்தவொரு ஹதீஸிலும் கூறப்படாததினாலும், இந்த ஹதீஸ் அறிவிப் பாளர் தொடரின் அடிப்படையிலும் இன்னும் மூலவாக்கியத்தினடிப் படையிலும் (ஙரீப் غريب எனப்படும்) தனிப்பட்ட எவ்விதத்துணைச்சான் றுமற்ற ஒரு தலை ஹதீஸாகும்.

மேலும் இந்த ஹதீஸை "முன்கர்" (منكر) மறுக்கப்பட்டது எனக் கூறப்பட்டுவதற்குக் காரணம்: இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசை யிலுள்ள அல்ஹைஸமுப்னு இம்றான் எனும் ஆள் அறியப்பட்டு அவரின் நிலை அறியப்படாத அறிவிப்பாளருக்கு குறித்த ஹதீஸை அறிவிக்கும் விடயத்தில் யாருமே துணையாக, பக்கபலமாக இல்லை என்பதாகும்.

இவ்வாறான நிலையிலுள்ள ஹதீஸ்கள் "முன்கர்" எனும் பலவீனமான மறுக்கப்பட்ட ஹதீஸ்களின் வகையுடன் சேர்க்கப்படும் என ஹாபிழ் இப்னு ஹஜர் رحمه الله அவர்கள் தங்களின் "அந்நுகது அலா கிதாபிப்னிஸ் ஸலாஹ்": (ப/274) எனும் நூலில் கூறியுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடரிலுள்ள யூனு ஸுப்னு புகைர் எனும் அறிவிப்பாளர் இந்த ஹதீஸை ஹைஸமி டமிருந்து அறிவிக்கும் விடயத்தில் தனிப்பட்டுள்ளார் இவர் ஹதீஸ் களில் தவறிழைப்பவராகவும், ஷீஆக் கொள்கையுடையவ ராகவும், மேலும் வேறுயாரும் அறிவிக்காத தனிப்பட்ட வேறு வழிகளில் அறிமுகமில்லாத ஹதீஸ்களை அறிவிப்பவராகவும் உள்ளார். எனவே இப்படிப்பட்ட ஒரு அறிவிப்பாளருக்கு குறித்த ஹதீஸை அறிவிக்கும் விடயத்தில் இன்னொருவர் துணையாகக் கிடைக்காவிட்டால் அவரின் அந்த ஹதீஸ் பலவீனமாகிவிடும் என இமாம் இப்னு ஹஜர் رحمه الله அவர்கள் தங்களின் "அந்நுகத்": (2/674) எனும் நூலில் கூறியுள் ளார்கள்.

"அல் அஜ்ஸாஉல் ஹதீஸிய்யா": (ப/198).

அவ்வாறே பல நூற்றாண்டுகளாக ஒரு ஹதீஸ் நடைமுறையி லில்லாதிருப்பது (அமுல் செய்யப்படாதிருப்பது) அந்த ஹதீஸ் விமர் சிக்கப்படுவதற்குரிய ஒரு முக்கிய காரணியாகும் என்பது அடிப்படை சட்டங்களில் பிரபல்யமானதே.

"கவாஇது பீஉலூமில் ஹதீஸ்" : (ப/125, 126).
"நூருல் அன்வார்" : (ப/186).
"அத்தல்வீஹு அலத் தவ்ழீஹ்" : (20/19, 20).

இந்த ஹதீஸை அல்பானி வரும்வரை ஸுன்னத்து எனக்கருதி யாரும் அமுல் செய்யவில்லை, இவ்வாறு அமுல் செய்வது பற்றி ஷாபிஈ மத்ஹபில் கூறப்பட்டது மத்ஹபில் பலவீனமான ஒருகருத்தாகும் என்பதை முன்னால் இமாம் இப்னுஸ்ஸலாஹ், இமாம் நவவீ, ஹாபிழ் இப்னு ஹஜர் رحمهم الله போன்றோரின் கருத்துக்கள் மூலம் விளங்கிக் கொண்டோம்.

அல்பானியும் கூட தனது "ஸலாத்துத் தராவீஹ்" (ப/18) எனும் நுலில் :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

فقول الشافعية : " يجب أن يسلّم من كل ركعتين " مناف لقول النووي بالجواز ، وهو من كبار العلماء المحققين في المذهب الشافعي ، فلاعذر لأحد يفتي بخلافه .

"ஷாபிஈ மத்ஹபின் (சில) உலமாக்கள் (நபில் தொழுகையின்) ஒவ்வொரு இரண்டு ரக்அத்துக்களிலும் ஸலாம் கொடுப்பது கடமையாகும் எனக் கூறியது (இமாம்) நவவீ رحمه الله அவர்கள் (இரண்டு ரக்அத்துக்களில் ஸலாம் கொடுப்பது) ஆகும் எனக்கூறியதற்கு மாற்றமாகும். (இமாம் நவவீ رحمه الله) அவர்களோ ஷாபிஈ மத்ஹபின் மிக உறுதிமிக்க உலமாக்களில் நின்றுமுள்ளவர்கள் என்பதனால் அவர் களின் கூற்றுக்கு மாற்றமாகத் தீர்ப்புக்கொடுக்கும் எவருக்கும் எந்தக் காரணமும் காட்ட முடியாது" எனக்கூறுவதன் மூலம் மத்ஹபில் பலவீனமான கருத்தின் படி தீர்ப்புக் கொடுக்கப்படமாட்டாது என்பதை ஏற்றுக் கொண்டு, இமாம் நவவீ رحمه الله போன்றோருக்கு மாற்றமாகப் பேசுவதை உறுதியாகக் கண்டித்துள்ளார்.

இவ்விடத்திலோ இமாம் நவவீ رحمه الله அவர்கள் மாத்திரமல்ல இமாம் இப்னுஸ்ஸலாஹ், ஹாபிழ் இப்னு ஹஜர் رحمهما الله போன்ற ஷாபிஈ மத்ஹபின் மிகமுக்கியமான முஹத்திஸீன்களுக்கு அம்மத்ஹபைச் சார்ந்த யார்தான் மாற்றமாகப் பேசமுடியும்? ஆனால் இந்த அல்பா னியோ அந்த முக்கிய உலமாக்களுக்கு மாற்றம் செய்யமுடியாது என ஓரிடத்தில் கூறி விட்டு, இவ்விடத்தில் ஷாபிஈ மத்ஹபின் உலமாக் களையும் தாண்டி மாற்றம் செய்து இந்த ஹதீஸை "ஹஸனானது", இன்னும் "அதன் அறிவிப்பாளர் தொடர் சீரானது" என தனது "அஸ் ஸில்ஸிலதுல் ழஈபா" (2/392, 393), இன்னும் "ஸிபது ஸலாத்தின் நபிய் யி ﷺ " (ப/137) எனும் நூல்களில் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது அவர் தனது "ஸலாத்துத் தராவீஹ்" எனும் நூலில் கூறிய கூற்றிற்கு முற்றிலும் மாற்றமானதாகும். இவரோ இவ்வாறு தனக் குத்தானே மாற்றமாகப் பேசிக்கொள்பவர் என்பது உலகறிந்த ரகசிய மாகும்.

குறிப்பு : இங்கு ஒரு கேள்விக்கு இடமுண்டு அதுதான் இப்னு அப்பாஸ் رضي الله عنهما அவர்களின் ஹதீஸுக்குத் தீர்ப்பாகக் கூறப்பட் டிருக்கும் உலமாக்களின் கூற்றுக்களே இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. இப்னு உமர் رضي الله عنهما அவர்களின் ஹதீஸுக்கு உலமாக்கள் கூறிய தீர்ப்புக்கள் அல்லவே? என்பதாகும்.

இக்கேள்விக்கு பல விதத்திலும் பதில் கூறமுடியும்.

1. இமாம் இப்னுஸ்ஸலாஹ், இமாம் நவவீ , ஹாபிழ் இப்னு ஹஜர், இமாம் ஸபீதீ رحمهم الله ஆகியோரின் தீர்ப்புக்களே இப்னு அப்பாஸ் رضي الله عنهما அவர்களின் ஹதீஸ் சம்பந்தபட்டதாகும். அதற்குப்பின் னால் இது வரை கூறப்பட்டதும் இன்னும் ஆய்வு (2) ல் சென்ற தும் இப்னு உமர் رضي الله عنهما அவர்களின் ஹதீஸுக்குரிய தீர்ப் புக்களே. மேலே கூறப்பட்ட இமாம்களின் தீர்ப்பு இப்னு அப்பாஸ் رضي الله عنهما அவர்களின் ஹதீஸ் சம்பந்தப்பட்டது என வைத்துக் கொண்டாலும் அதற்குப் பின்னால் கூறப்பட்டுள்ள தீர்ப்பையும் ஆய்வு (2) ல் சென்றதையும் வைத்து இப்னு உமர் رضي الله عنهما அவர்களின் ஹதீஸையும் ஆதாரமாக எடுக்க முடியாதே.
2. இப்னு அப்பாஸ் رضي الله عنهما அவர்களின் அறிவிப்பின் மூலம் வந்துள்ள ஹதீஸில் எழுத்தாளரினால் தவறு ஏற்பட்டுள்ளது. அதில் சரியானது **"இப்னு அப்பாஸ்** رضي الله عنهما **"** என்பதற்குப் பதிலாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்னு உமர் رضي الله عنهما" என்பதாகும். இப்பதிலினடிப்படையில் மேலே கூறப்பட்ட இமாம்களின் தீர்ப்புக்கள் இந்த ஹதீஸுக்குரிய தீர்ப்புக்களாகும்.

3. ஒரு ஹதீஸ் ஏற்றுக் கொள்ளப்படாமலிருப்பதற்கு அறிவிபபாளர் தொடரில் மாத்திரம் தான் ஆராய்ச்சி செய்யப்படவேண்டும் என்ப தில்லை. மாறாக அறிவிப்பாளர் தொடர் சீராக இருக்கும் ஸஹீ ஹான சில ஹதீஸ்களும் சில வேளை ஆதாரம் எடுக்கப்படாமல் விடப்படும். அவ்வாறாக விடப்படும் காரணி ஒன்று இந்த ஹதீஸில் உள்ளது. அதுவே: ஒரு கூட்டத்தினர் அறிவிக்கும் பிரபல்யமான ஒரு விடயத்துக்கு ஒருவர் மாற்றம் செய்வதாகும்.

"கவாஇது பீ உலூமில் ஹதீஸ்": (ப/125).

(ஆய்வு(1)ல் நாம் கூறியதைப் போன்று) இவ்விடத்தில் நபி ﷺ அவர்களின் தொழுகை பற்றி அறிவிக்கும் எல்லா ஸஹாபாக்களின் அறிவிப்புகளுக்கும் இந்த ஹதீஸ் மாற்றமாக உள்ளது. இக்காரணமே இதன் அறிவிப்பாளர் தொடரை ஆராயாது விட்டு விட்டு அதன் வார்த் தையை வைத்தே தீர்ப்பளிக்கப் போதுமானதாகும்.

இப்பதிலினடிப்படையிலும் மேலே கூறப்பட்ட உலமாக்களின் தீர்ப் புக்கள் இந்த இப்னு உமர் رضي الله عنهما அவர்களின் ஹதீஸையும் சாரும், ஏனெனில் இவ்விருவரின் (இப்னு அப்பாஸ், இப்னு உமர் رضي الله عنهم) ஹதீஸ்களும் நபி ﷺ அவர்களின் தொழுகை பற்றி பிரபல்யமான ஹதீஸ்களை அறிவிக்கும் எல்லா ஸஹாபாக்களுக்கும் மாற்றமாகும்.


4. இப்னு அப்பாஸ் رضي الله عنهما அவர்களின் ஹதீஸின் அறிவிப்பாளர் தொடர் அறியப்படாத ஒன்றாகும். இவ்வாறு அறிவிப்பாளர் தொடர் அறியப்படாத ஹதீஸ்களை ஏற்றுக் கொள்ளமுடியாது. ஏனெனில் அந்த ஹதீஸ் சரியானது அல்லது பிழையானது என்பதைக் கண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிப்பதற்கு அறிவிப்பாளர் தொடரை ஆராய்ச்சி செய்வது அவசியமாகும்.

இப்பதிலினடிப்படையில் முன் சென்ற இமாம்கள் இந்த ஹதீஸுக்கு ஹதீஸின் வார்த்தையை வைத்தே தீர்ப்பளித்துள்ளார்கள் என்பது விளங்குகிறது. அவ்வாறு ஹதீஸின் வார்த்தையை வைத்துத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது என்பதனால் இத்தீர்ப்பு இரு ஹதீஸ்களுக் குமுரியதாகும்.

இவ்வாய்வின் மூலம் அல்பானியைத் தவிர வேறுயாரும் இந்த ஹதீஸை சரிகாணவில்லை என்பது புலனாகின்றது, வரும் ஆய்வில் புகஹாக்கள் எனப்படும் மார்க்கச் சட்டக்கலை நிபுணர்களிடத்தில் "அல் அஜ்ன்" எப்போது உருவாகியது என்பதைப் பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வு - (4) : புகஹாக்களிடத்தில் "அல் அஜ்ன்" தோன்றிய வரலாறு.

"அல் அஜ்ன்" (மாக்குலைத்தல்) பற்றி ஆரம்ப சட்டக்கலை மேதைகளின் நூல்களில் காணப்படவில்லை. இதனைப் பற்றி ஷாபிஈ மத்ஹபைச் சார்ந்த சில இமாம்களின் நூல்களில் தான் ஆரம்பமாகக் கூறப்பட்டுள்ளது. ஷாபிஈ மத்ஹபின் இமாம்களில் முதன் முதலில் இது பற்றிக்கூறியது இமாம் கஸாலீ رحمه الله (மரணம் : 505) அவர்கள் தான், அவர்கள் தங்களின் "அல்வஸீத்": (2/629) - "அல் அஜ்ஸாஉல் ஹதீஸிய்யா": (ப/201). - எனும் நூலில்தான் இதனை முதலில் கூறினார்கள். அதன் பின்பு அவர்களே தமது "அல்வஜீஸ்" எனும் நூலிலும் குறிப்பிட்டார்கள் - "பத்ஹுல் அஸீஸ்" (அல்மஜ்மூஉ): (3/483) - இவ்விரு நூல்களிலுமிருந்து தான் ஷாபிஈமத்ஹபின் மிக முக்கியமான நூல்கள் உருவாகின.

இமாம் கஸாலீ رحمه الله அவர்களுக்குப் பின் "பத்ஹுல் அஸீஸ் பிஷரஹில் வஜீஸ்" எனும் நூலில் இமாம் ராபிஈ رحمه الله (மரணம் : 623) அவர்களும் இதனைக் கூறினார்கள், ஆனால் இவர்களோ இந்த ஹதீஸை இப்னு அப்பாஸ் رضي الله عنهما அவர்கள் அறிவிப்பதாக இமாம் கஸாலீ رحمه الله அவர்கள் கூறாததை சுட்டிக்காட்டியிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

"பத்ஹுல் அஸீஸ்" (அல் மஜ்மூஉ): (3/491).

மேலும் இமாம் ராபிஈ رحمه الله அவர்களுக்குப் பின்பு "அல்வஸீத்" எனும் நூலிற்கு ஹாபிழ் இப்னுஸ் ஸலாஹ் رحمه الله (மரணம்: 643) அவர்கள் எழுதிய விரிவுரையில் இந்த ஹதீஸைக் குறிப்பிட்டுவிட்டு முன் சென்ற ஆய்வில் கூறப்பட்ட அவர்களின் கூற்றை விரிவாகக் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தல்கீஸுல் ஹபீர்": (1/625).

அதன் பின்பு இமாம் நவவீ رحمه الله (மரணம் : 676) அவர்கள் தங்களின் "அல் மஜ்மூஉ": (4/581, 582) எனும் நூலில் இதனைக் குறிப்பிட்டு விட்டு மேலே அவர்களால் இந்த ஹதீஸ் பற்றிக் குறிப்பிடப் பட்டதைக் கூறியுள்ளார்கள்.


அதன் பின்பு இமாம் பைழாவி رحمه الله (மரணம் : 685) அவர்கள் தங்களின் "அல்ஙாயதுல் குஸ்வா": (1/303, 304) (الغاية القصوى) எனும் நூலில் இதுபற்றிக் கூறியுள்ளார்கள்.

"அல்அஜ்ஸாஉல் ஹதீஸிய்யா": (ப/202).

இவைகளின் மூலம் இந்த சட்டப்பிரச்சினை இமாம் ஷாபிஈ رحمه الله அவர்களினால் கூறப்பட்டதோ அல்லது ஷாபிஈமத்ஹபின் முன்னோர்களால் பேசப்பட்டதோ அல்ல, மாறாக ஹிஜ்ரி 450 க்கும் பின்னால் இமாம் கஸாலீ رحمه الله அவர்களினால் கூறப்பட்டது எனத் தெளிவாகின்றது. இமாம் கஸாலீ رحمه الله அவர்கள் இவ்வாறு இதனை முதன் முதலில் கூறக்காரணம் இமாம் ஷாபிஈ رحمه الله அவர்கள் கூறிய إذا صح الحديث فهو مذهبي "ஹதீஸ் ஸஹீஹாக இருப்பின் அதுவே எனது மத்ஹபாகும்". என்ற வார்த்தையேயாகும், ஆனாலும் இந்த ஹதீஸ் பலவீனமானது என இமாம் கஸாலீ رحمه الله அவர்களுக்குப் பின்னால் வந்த ஷாபிஈ மத்ஹபின் மிகமுக்கிய முஹத்திஸ்கள் கூறியுள்ளதால் இது ஷபிஈமத்ஹபில் ஏற்றுக் கொள்ளப்பட்ட, மத்ஹப் மயப்படுத்தப் பட்ட கருத்தாக மாட்டாது. அவ்வாறே ஏனைய எந்த மத்ஹபுகளிலும் இவ்வாறு மாக்குலைப்பவனைப் போன்று பூமியில் கைகளை ஊன்றி தொழுகையில் எழுவது ஸுன்னத்து எனக் கூறப்படவுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாய்வின் மூலம் சட்டநிபுணர்களிடத்தில் “அல் அஜ்னின்” தோற்ற வரலாறு புலனாகின்றது. அடுத்த ஆய்வில் அறபுப் பாசையில் “அல் அஜ்ன்” எனும் வார்த்தை எதற்குப் பிரயோகிக்கப்படும் என்பதைப்பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வு ~ (5) : அறபுப் பாஷையில் "அல் அஜ்ன்".

குர்ஆன் ஹதீஸிலிருந்து சட்டங்களை அமைப்பவருக்கு அறபுப் பாஷையில் ஆழ்ந்த அறிவிருப்பது அவசியமாகும். அதிலே ஆழ்ந்த அறிவற்றவர் அப்பாஷையின் சில வார்த்தைகளுக்கு ஆச்சரியமான அர்த்தங்களைக் கொடுத்து அவ்வார்த்தையின் மூலம் எதிர் பார்க்கப்பட்ட கருத்துக்கு நேர்முரணான கருத்தையே முன்வைப்பார். இதனால்தான் இப்னுபாரிஸ் رحمه الله அவர்கள் தங்களின் "அஸ்ஸாஹிபீ": (ப/50 - 56) எனும் நூலில்:

باب القول في حاجة أهل الفقه والفتيا إلى معرفة اللغة العربية .

**"தீர்ப்பு வழங்கும் முப்திகளும், சட்டமியற்றும் புகஹாக்களும் அறபிப்பாஷையை அறிந்திருக்கத் தேவைப்பட்டவர்களே"** என்றொரு தலைப்பிட்டு அதில் மிகப்பயன்மிக்க முக்கியமான சில விடயங்களைக் கூறிவிட்டு:

فلذلك قلنا : إنّ علم اللغة كالواجب على أهل العلم ، لئلاّ يحيدوا في تأليفهم أوفتياهم عن سنن الإستواء .

**"இதனால் தான் நாம் ஆலிம்கள் தாங்கள் இயற்றும் நூல்களிலோ, அல்லது வழங்கும் தீர்ப்புக்களிலோ, நேரான பாதையை விட்டும் திரும்பி விடாதிருக்க அறபிப் பாஷையை அறிந்திருப்பது அவர்களுக்கு வாஜிபைப் போன்றதாகும்** (மிகவும் அவசியமானதாகும்) **எனக் கூறினோம்"**. என எடுத்தெழுதியுள்ளார்கள்.

"அல் அஜ்ஸாஉல் ஹதீஸிய்யா": (ப/205).

பெரும்பெரும் உலமாக்களுக்குக்கூட அறபுப் பாஷையில் தவறு கள் ஏற்பட்டுள்ளன, அப்படிப்பட்ட பிழைகளைத் தொகுத்து இமாம் கத்தாபீ رحمه الله அவர்கள் " இஸ்லாஹு" ஙலதில் முஹத்திஸீன்" -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(إصلاح غلط المحدثين) முஹத்திஸ்களின் தவறுகளை சீர்திருத்தல் - எனும் தனி நூலையே எழுதியுள்ளார்கள். அவ்வாறு ஹதீஸின் கருத்தையே மாற்றிவிடும் பிழையான விளக்கத்திற்கு ஒரு உதாரணம் வருமாறு:

இமாம் கத்தாபீ رحمه الله அவர்கள் தாம் "ஸுனனு அபீதாவூத்" எனும் நூலுக்கு விரிவுரையாக எழுதிய "மஆலிமுஸ் ஸுனன்" (2/13) எனும் நூலில்:

إن رسول الله ﷺ نهى عن الحلق قبل الصلاة يوم الجمعة .

"வெள்ளியன்று (ஜும்ஆத்) தொழுகைக்கு முன்னால் கூட்டம் கூட்டமாக உட்காருவதை நபி ﷺ அவர்கள் தடை செய்தார்கள்." எனும் ஹதீஸிற்கு விளக்கம் எழுதும் போது:

"ஹிலக்" (பல கூட்டங்கள்) என்பது "ஹல்கா" (ஒரு கூட்டம்) எனும் சொல்லின் பன்மையாகும். எனது ஆசிரியர்களில் ஒருவர் இந்த வார்த்தையை "ஹல்க்" (தலை சிரைத்தல்) என விளங்கி நாற்பது வருடங்களாக ஜும்ஆவினுடைய நாளில் தொழுகைக்கு முன்னால் தலையை சிரைக்காமல் (மொட்டையாடிக்காமல்) இருந்தார்கள். அவர்களிடம் நான்: இந்த ஹதீஸில் கூறப்பட்டுள்ள வார்த்தை "ஹல்கா" (கூட்டம்) எனும் வார்த்தையின் பன்மையான ஹிலக் (கூட்டங்கள்) என்பதே எனக் கூறிவிட்டு, இதன் மூலம் ஜும்ஆத் தொழுகையின் முன்பு சிறுசிறு கூட்டங்களாக வட்டமாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பதைத்தான் நபி ﷺ அவர்கள் வெறுத்து (நபிலான) தொழுகைகளிலும் திக்ரிலும் ஈடுபடும் படி ஏவினார்கள் என அவர்களிடம் கூறினேன். இதனைக் கேட்ட எனது அந்த ஆசிரியர்: என்னை விட்டும் ஒரு குழப்பத்தை நீ நீக்கிவிட்டாய் எனக் கூறி எனக்கு துஆ செய்தார்கள்". எனும் ஆச்சிரயமான சம்பவத்தை எடுத்தெழுதியுள்ளார்கள். இது மட்டுமல்லாது இது போன்ற இன்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல சம்பவங்கள் உள்ளன. விரிவஞ்சி இத்துடன் போதுமாக்கிக் கொள்கிறேன்.

கருத்தையே மாற்றி அபூர்வமான, வினோதமான விளக்கங்களுக்கு வழிவகுக்கும் முறையில் சில முன்னைய உலமாக்களாலேயே தவறாக அர்த்தம் விளங்கிக் கொள்ளப்பட்டிருக்கும் போது தற்போதைய அறபியில் நிபுணத்துவமற்றவர்கள் எம்மாத்திரம்?

இனி "அல் ஆஜின்" என அறபுப்பாஷையில் யாருக்குக் கூறப்படும் எனவும், இன்னும் அதன் உண்மையான வடிவம் என்ன என்பதையும் ஆராய்வோம்.

(முதலாவது) : **அறபுப்பாஷையில் "அல்ஆஜின" யார்?**

இதுபற்றி இமாம் இப்னு மன்ழூர் رحمه الله அவர்கள் தங்களின் "லிஸானுல் அறப்" (13/337) எனும் நூலில்:

العاجن من الرجال : المعتمد على الأرض بجُمْعه ، إذا أراد النهوض من كبر أوبدن .

"வயோதிபம் அல்லது உடற்பருமனுள்ள ஒரு மனிதர் எழும்பும் போது தனது இரு கைகளையும் பொத்திப் பூமியில் ஊன்றுபவராக இருப்பின் அவருக்கு "அல் ஆஜின்" எனக் கூறப்படும்". என எழுதியுள்ளார்கள். மேலும் இது பற்றி இவ்வாறே இமாம் ஸபீதீ رحمه الله அவர்கள் தங்களின் பின்வரும் நூல்களில் எழுதியுள்ளார்கள்.

1. "இத்ஹாபுஸ் ஸாததில் முத்தகீன்" : (3/114).
2. "தாஜுல் அறூஸ்" : (18/368, 369).

மேலும் இமாம் அபுல் அப்பாஸ் அஹ்மதுப்னு முஹம்மத் அல்ஜுர்ஜானீ رحمه الله அவர்கள் தங்களின் "அல் முன்தகபு மின் கினாயாதில் உதபாஇ வஇர்ஷாதில் புலஙாஇ" (4/136) எனும் நூலில்:

من الكنايات عن الشيخ : العاجن ، لأنه إذا قام إعتمد على جميع كفيه كالعاجن .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வயோதிபருக்கு சாடையாகக் கூறப்படும் வார்த்தை களிலிருந்து முள்ளதுதான் "அல் ஆஜின்" எனும் வார்த்தையும். ஏனெனில் அவ்வ யோதிபர் மாக்குலைப்பவனைப் போன்று தன் இரு உள்ளங்கைகளி லும் ஊன்றியே எழும்புகின்றார்". எனக் கூறியுள்ளார்கள்.

"அல் அஜ்ஸாஉல் ஹதீஸிய்யா": (ப/215).

மேலும் இது பற்றி இமாம் இப்னு பாரிஸ் رحمه الله அவர்கள் தமது "புத்யா பகீஹில் அறப்" (ப/36) எனும் நூலில்:

العاجن الذي إذا نهض عجن الأرض بيديه من كبر.

"அல் ஆஜின்" என்பவர் எழும்போது வயோதிபத்தினால் தனது இரு கைகளின் மூலமும் பூமியை குலைப்பவருக்கு (அதாவது மாக்குலைப்பவனைப் போன்று பூமியில் ஊன்றுபவருக்கு)ச் சொல் லப்படும்". எனக் கூறியுள்ளார்கள்.

"அல் அஜ்ஸாஉல் ஹதீஸிய்யா": (ப/216).

மேலும் இது பற்றி இமாம் மஜ்துத்தீன் அஷ்ஷீராஸீ அல்பைரு ஸாபாதீ رحمه الله அவர்கள் கூறும் போது: عجنه فلان : نهض معتمدا على الأرض كبرا

"பூமியைக் குலைத்தான் என்றால் வயோதிபத்தினால் பூமியின் மீது ஊன்றியவனாக எழும்பினான் (என்பதே பொருளாகும்)". எனக் கூறியுள் ளார்கள்.

"அல்காமூஸுல் முஹீத்": (4/243).

அறபுப் பண்டிதர்களான இந்த இமாம்களின் கூற்றுக்களை உற்று நோக்கினால் "அல் ஆஜின்" என்ற வார்த்தை வயோதிபத்தினால் அல்லது இயலாமையினால் தன் கைகளைப் பூமியில் ஊன்றிச் சிரமப் பட்டு எழும் மனிதனுக்கு: அவன் இயலாமையினால், பலவீனத்தால், முதுமையினால் இப்படி எழுகின்றான் என நேரடியாகச் சொல்லாமல் மாக்குலைப்பவனைப் போன்று எழுகிறான் என்று அவனுடைய பலவீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னத்தை சூசகமாகச் சொல்வதற்கே அறபு மொழி வழக்கில் பிரயோகிக் கப்படுகின்றது எனத் தெளிவாக விளங்க முடிகிறது.

இக்கருத்தினடிப்படையில் அப்துழ்ழாஹிப்னு உமர் رضي الله عنهما அவர்களின் செயல் மூலம் (அவர்கள் பூமியில் இரு கைகளையும் "அல் ஆஜினை"ப் போன்று ஊன்றியே எழுவார்கள் என) அல் அஸ்ரகுப்னு கைஸ் رحمه الله அவர்கள் அறிவிக்கும் ஹதீஸை ஸஹீஹ் என வைத்துக் கொண்டாலும் இவ்வாறு இப்னுஉமர் رضي الله عنهما அவர்கள் இயலா *மையினாலேயே செய்திருப்பார்கள் என்பதை "ஸஹீஹுல் புகாரி"* - எண் (2730) - யில்: **"அப்துழ்ழாஹிப்னு உமர் رضي الله عنهما அவர்களுக்கு யஹூதிகள் அடித்ததினால் அவர்களின் கை கால்களின் மூட்டுக்கள் பாய்ந்துவிட்டன"** என்ற ஹதீஸும், இன்னும் அதன் காரணமாக அவர்கள் தொழுகையில் சம்மானங்கால் போட்டே உட்காருவார்கள், அப்போது அவர்களின் ஒரு மகன் ஏன் இவ்வாறு உட்காருகின்றீர்கள்? என வினவியதற்கு إن رجلي لاتحملاني **"எனது இரண்டு கால்களுக்கும் என்னை சுமந்து கொள்ள முடியாது (சக்தியற்று) இருக்கிறது".** எனக் கூறுவார்கள் - "ஸஹீஹுல் புகாரீ" எண்: (827) - என்ற ஹதீஸும் உறுதிப் படுத்துகின்றன.

மேலும் அல் அஸ்ரகுப்னு கைஸ் رحمه الله அவர்களே அப்துழ்ழாஹிப்னு உமர் رضي الله عنهما அவர்கள் மூலம் இச்செயலை அறிவிப்பதும் நாம் மேலே கூறிய கருத்தை இன்னும் உறுதிப்படுத்துகிறது. ஏனெனில் அஸ்ரக் رحمه الله அவர்கள் ஹிஜ்ரி 120ல் மரணமானார்கள், அப்துழ்ழாஹிப்னு உமர் رضي الله عنهما அவர்களோ ஹிஜ்ரி 73ல் தன்னுடைய 84ம் வயதில் மரணமானார்கள், அஸ்ரக் رحمه الله அவர்களோ அப்துழ்ழாஹ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

رضي الله عنه அவர்களின் மரணத்தின் பின்பு 47 வருடங்கள் வாழ்ந்துள்ளார்கள். அந்த வகையில் அஸ்ரக் رحمه الله அவர்கள் 60 வருடங்கள் தான் வாழ்ந்தார்கள் என வைத்துக் கொண்டால் அவர்கள் ஹிஜ்ரி 60ல் பிறந்திருக்க வேண்டும் அவர் தன்னுடைய 10வது வயதில் அதாவது ஹிஜ்ரி 70ல் தான் அப்துழ்ழாஹ் رضي الله عنهما அவர்களின் இச் செயலைப் பார்த்தார்கள் என வைத்துக் கொண்டாலும் அப்துழ்ழாஹ் رضي الله عنه அவர்களுக்கு அந்நேரத்தில் 81 வயதாகியிருந்திருக்கும்.

அவ்வாறின்றி அஸ்ரக் رحمه الله அவர்கள் 60 வருடங்களையும் தாண்டி 80 வருடங்கள் வரை வாழ்ந்தார்கள் என வைத்துக் கொண்டாலும் அவர்கள் ஹிஜ்ரி 40ல் பிறந்திருக்க வேண்டும் அவர்கள் தன்னுடைய 10வது வயதில் ஹிஜ்ரி 50ல் தான் அப்துழ்ழாஹிப்னு உமர் رضي الله عنهما அவர்களின் இச்செயலைப் பார்த்தார்கள் என வைத்துக் கெண்டாலும் அப்துழ்ழாஹ் رضي الله عنه அவர்களுக்கு அந்நேரத்தில் 61 வருடங்களா கியிருந்திருக்கும்.

இன்னும் அப்துழ்ழாஹிப்னு உமர் رضي الله عنهما அவர்கள் வயோதிபத்தின் காரணமாக மாத்திரம் இயலாமையை அடைந்தவர்களல்லர், மாறாக "கைபர்" என்ற இடத்தின் யூதர்களினால் தாக்கப்பட்டதனாலும் அவர்கள் பலவீன மடைந்திருந்தார்கள். அத்தாக்குதலில் அவர்களின் கை கால்களின் மூட்டுக்கள் பாய்ந்தன. உமர் رضي الله عنه அவர்கள் கைபரின் யூதர்களை நாடுகடத்த இதனையும் ஒருகாரணமாக எடுத்துக் கொண்டு - "புகாரி" எண்: (2730) - ஹிஜ்ரி 20ல் அவர்களை நாடுகடத்தினார்கள். - தாரீகுல் குலபா: (ப/105) - அந்நேரத்தில் அப்துழ்ழாஹிப்னு உமர் رضي الله عنهما அவர்களின் வயது சுமார் 31 ஆக இருந்திருக்கும், ஏனெனில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் நபி ﷺ அவர்களுக்கு நபிப்பட்டம் கிடைத்து சிறிது காலத்தின் பின்பு பிறந்தார்கள் - "தக்ரீபுத்தஹ்தீப்" (1/303) எண்: (3580) - அந்த இளம் வயதிலிருந்தே யூதர்களின் தாக்குதலின் காரணமாக அவர்கள் பலவீன மடைந்திருந்தார்கள்.

அப்துழ்ழாஹிப்னு உமர் رضي الله عنهما அவர்களின் வாழ்க்கையை ஆராய்ந்ததில் அவர்களிடமிருந்து ஹதீஸ்களை அறிவிக்கும் அஸ்ரகுப்னு கைஸ் رحمه الله அவர்கள் அவர்களை வயோதிபராகவே சந்தித்திருக்க முடியும் எனத் தெளிவாக விளங்க முடிகிறது. அவ்வாறு அவர்கள் வயோ திபத்தை அடைவதற்கு முன்பே இவ்வாறு செய்தார்கள் என வைத்துக் கொண்டாலும் அவர்கள் யூதர்களினால் தாக்கப்பட்டு பலவீனப்படுத்தப்பட்டதனால் தான் இவ்வாறு செய்திருப்பார்கள் எனவும் அறிந்து கொள்ளலாம்.

அவ்வாறிருந்தும் அல்பானி சொல்லிவிட்டாரல்லவா? என்பதற்காக யாரெல்லாம் இந்த ஹதீஸின் படி செயல்படவிரும்புகிறார்களோ அவர்கள் வாலிபர்களாக இருப்பின் வயோதிபம் வரும்வரை பொறுத்திருக்கவும், அல்லது நோய்களின் மூலம் தங்கடத்துக் குள்ளாக்கப்படும் வரை காத்திருக்கவும், ஏனெனில் இவ்வாறான தங்கடமுடையவர்கள் கைகளைப் பூமியில் ஊன்றி எழுவதற்கே அறபுப் பாஷையில் "அல் ஆஜின்" எனக்கூறப்படும்.

**(இரண்டாவது) : *அறபுப்பாஷையில் "அல்அஜ்னின்" அமைப்பு.***

அறபு அகராதிகளில் "அல் ஆஜ்னின்" அமைப்பு இருவிதங்களில் விவரிக்கப்பட்டுள்ளது.

1. தனது இருகைகளையும் பொத்தி விரல்களின் வெளிப்புறத்தில் ஊன்றுவது .

நூல்கள் : "லிஸானுல் அறப்" : (13/337).

"இத்ஹாபுஸ் ஸாததில் முத்தகீன்" : (3/114).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தாஜுல் அறூஸ்" : (18/368,369).


2. தனது இரு கைகளின் விரல்களை விரித்து உள்ளங்கைகளைப் பூமியில் ஊன்றுவது.

நூல்கள் : "அல் முன்தகபு மின் கினாயாத்தில் உதபா": (ப/136)

"தாஜுல் அறூஸ்"
"அல் பத்ருல் முனீர்" } "அஜ்ஸாஉல் ஹதீஸிய்யா":(ப/217).

இவ்விரண்டாவது கருத்தையே இமாம் நவவீ رحمه الله அவர்கள் தனது "அல்மஜ்மூஉ" எனும் நூலிலும், ஹாபிழ் இப்னுஸ்ஸலாஹ் رحمه الله அவர்கள் தனது " ஷரஹுல் வஜீஸ் " எனும் நூலிலும் சிறந்ததெனத் தேர்ந்தெடுத்துள்ளார்கள்.

குறிப்பு : தற்போது சில புதுமைப்பித்தர்களின் நடைமுறையோ மேலே கூறப்பட்ட முதலாவது கருத்துக்கு முரணாகவே உள்ளது. ஏனெனில் இவர்கள் விரல்களை மடித்துப் பொத்தாது, மடித்து விரித்தவாரே இவ்வாறு ஊன்றி எழுகினறனர். இம்முறையோ அவர்களின் தலைவர்களிலும் யாரும் கூறாததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே பார்வையில் .....

1. ஸுஜூதிலிருந்து எழும்பும் முறை பற்றி ஏழு ஸஹாபாக்களின் மூலம் அறிவிக்கப்பட்டிருக்கும் ஹதீஸ்களில் ஒரேயொரு ஹதீஸே இச்சட்டப்பிரச்சினை சம்பந்தமானதாகும்.
2. அந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடரிலும் யூனுஸுப்னு புகைர், அல்ஹைஸமுப்னு இம்றான் எனும் சர்ச்சைக்குரிய இரு அறிவிப்பாளர்கள் உள்ளனர்.
3. இந்த ஹதீஸை ஹதீஸ்கலையின் பெரும் மேதைகளான ஹாபிழ் இப்னுஸ்ஸலாஹ், இமாம் நவவீ, ஹாபிழ் இப்னு ஹஜர், இமாம் ஸபீதீ رحمهم الله போன்றோர் மிக பலவீனப்படுத்தியுள்ளார்கள்.
4. சட்ட மேதைகளிடத்திலும் இது பற்றிய பேச்சு ஐந்தாவது நூற்றாண்டில் தான் உருவானது. அவ்வப்போது அதற்குப் பதில்களும் கொடுக்கப்பட்டன.
5. அறபு மொழியிலும் “அல் ஆஜின்” என்ற வார்த்தையை வயோதிபம் அல்லது இயலாமையினால் பூமியில் கைகளை ஊன்றுபவருக்கே கூறப்படும். சுகதேகிகள் பூமியில் கைகளை ஊன்றுவதற்கல்ல.
6. இந்த ஹதீஸை ஒரு வாதத்திற்கு சரியானது என வைத்துக் கொண்டாலும், இவ்வாறு அப்துழ்ழாஹிப்னு உமர் رضي الله عنهما அவர்கள் இயலாமை இன்னும் வயோதிபத்தினாலேயே செய்திருக்கிறார்கள்.
7. வாலிபர்களும் சுகதேகிகளும் குத்துச் சண்டை வீரர்களைப் போன்று கைகளைப் பொத்தி எழும்புவதற்கும் “அல் ஆஜின்” எனக் கூறப்படும் என்று அறபு மொழியில் இல்லாத இப்புதிய கோலத்தைக் கண்டு பிடித்த இந்த ஞானி “அல்பானியா”


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டைச் சார்ந்த அறபி அல்லாத அஜமி என்பது தெரிந்த விடயமே!

அறபி அல்லாத அஜமிகளே "அல் ஆஜின்" என்ற பதத்திற்கு இவ்வாறு தப்பாக பொருள் கொடுப்பதாகக் கேலி செய்கிறார் இமாம் இப்னுஸ்ஸலாஹ் رحمه الله அவர்கள்.

"இந்த ஹதீஸைக் கொண்டு மிகுதமான (அஜமிகள்) அறபியல்லாதோர் அமல் செய்துள்ளனர். அவர்களின் இந்த செயல் முறைக்கும் ஆதாரமற்ற இந்த ஹதீஸுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை, அவ்வாறு அது ஸஹீஹானது என்று ஏற்றுக் கொண்டால் "அல்ஆஜின்" என்பது முதிர்ந்தவரைக் குறிக்கும் பிசைதல் என்ற பதத்துக்கும் வயோதிபத்துக்கும் ஒப்பிட்டால் அதன் கருத்து: தமது இருகரங்களையும் அழுத்தி ஊன்றுவதாகும். விரல்களை மடிப்பது என்று பொருள்படாது".

"தல்கீஸுல் ஹபீர்": (1/626), எண்: (392).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவுரை

இந்த நீண்ட ஆய்வின் மூலம் ஒரு உண்மை வெளிச்சத்துக்கு வருகின்றது. அதாவது தற்போது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விரல்களை மடித்துப் பொத்தாது, மடித்துவிரித்து விரல்களின் வெளிப்பகுதியால் எழும் இச்செயல் ஹதீஸ்களில் உள்ளதல்ல. இது பித்அத்தான செயலே, ஹதீஸில் வந்த முறையோ குத்துச் சண்டை வீரர்களைப் போன்று விரல்களை மடக்கிப் பொத்தி கைகளை ஊன்றுவதாகும். ஆனாலும் அந்த ஹதீஸும் முழுக்க முழுக்க ஏற்றுக்கொள்ள முடியாத பலவீனமான ஹதீஸாகும். தம்கொள்கைக்காக நூற்றுக்கணக்கான சுத்த ஸஹீஹான ஹதீஸ்களையெல்லாம் பலவீனப்படுத்தத் துணிந்த இந்த வஹ்ஹாபிகளுக்கு இந்த பூஃபான பலவீனமான ஹதீஸ் மட்டும் எப்படி ஆதாரமாகிவிடும்? சுத்தமான ஹதீஸ்களில் இல்லாதவற்றையெல்லாம் மத்ஹபுகளைப் பின்பற்றுபவர்கள் தங்களின் இமாம்களைப் பின்பற்றிச் செய்கிறார்கள் என்றுதானே உங்களின் அர்த்தமற்ற, உம்மத்தைப் பிரித்துப்போட்ட வஹ்ஹாபியப் போராட்டத்தைத் துவக்கினீர்கள்! எமக்கு ஹராமானது உங்களுக்கு எப்படி ஹலாலகிவிடும்?

ஆக விரல்களின் வெளிப்பகுதியால் கையூன்றி எழும் அர்த்தமற்ற செயலைத் தவிர்ந்து எமது தொழுகையைப் பாதுகாப்போம். உள்ளங்கைகளை ஊன்றி எழுவதே நபி ﷺ அவர்களின் வழி, அதுவே எம் வழி, அதுவே சத்தியத்தின் வழி, அதற்கு மாற்றமானது அசத்தியத்தின் வழி. அல்லாஹ் جل جلاله நம்மனைவரையும் இறுதி மூச்சுவரை சத்தியத்தில் வாழ்ந்து அதிலே மரணிக்கச் செய்வானாக ஆமீன்!!

وصلى الله على سيدنا محمد وآله وصحبه وسلم . وآخر دعوانا أن الحمد لله رب العالمين .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணை நூற்கள் — المراجع


1. إتحاف السّادة المتّقين، للزبيدي. (ت: 1205) –العلمية – 1422 هـ.
2. الأجزاء الحديثيّة، لبكر بن عبد الله أبي زيد. في قيد الحياة – دار العاصمة – 1416 هـ.
3. إرواء الغليل، للألباني. (ت: 1420) –
4. الإصابة، لإبن حجر. (ت: 852) – دارالكتب العلمية – 1423 هـ.
5. الأمّ، للامام الشافعي. (ت: 204) – " – 1423 هـ.
6. تاريخ الخلفاء، للسيوطي. (ت: 911) – " – بدون تاريخ.
7. تقريب التّهذيب، لإبن حجر. (ت: 852) – المكتبة التجارية – 1415 هـ
8. التقرير والتّحبير، لابن أمير الحاج. (ت: 879) – العلمية – 1419 هـ.
9. تلخيص الحبير لإبن حجر. (ت: 852) – " – 1419 هـ.
10. تلخيص المستدرك، للذهبي. (ت: 748) – " – 1411 هـ.
11. التلويح على التّوضيح، للتفتازاني. (ت: 792) – " – بدون التاريخ.
12. تهذيب التّهذيب، لإبن حجر. (ت: 852) – المكتبة التجارية –1415 هـ.
13. تيسير دراسة الأسانيد للمبتدئين، لعمرو عبد المنعم. في قيد الحياة – دار الضياء –1421 هـ
14. الجامع الصّغير، للسيوطي. (ت: 911) – دارالكتب العلمية – بدون التاريخ
15. الجرح والتعديل، لإبن أبي حاتم. (ت: 327) – " – 1422 هـ
16. سلسلة الأحاديث الصّحيحة، للألباني. (ت: 1420) – المكتب الإسلامي –
17. سلسلة الأحاديث الضّعيفة، للألباني. (ت: ") – " –
18. السّنن (عون المعبود)، للإمام أبي داود. (ت: 275) –العلمية – 1423 هـ.
19. السّنن، للإمام النسائي. (ت: 303) – الفيصلية – بدون التاريخ.
20. السّنن، لإبن ماجــه. (ت: 273) – إحياء التراث العربي – 1395 هـ
21. السّنن، للدارمي. (ت: 255) –دار الفكر – 1398 هـ.
22. السّنن، للدارقطني. (ت: 385) –العلمية – 1417 هـ.
23. السّنن الكبرى، للبيهقي. (ت: 458) – " –1420 – هـ.
24. سير أعلام النّبلاء، للذهبي. (ت: 743) – مؤسسة الرسالة – 1409 هـ.
25. الصحيح (فتح الباري)، للإمام البخاري (ت: 256) – المكتبة السلفية–


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. الصحيح ( الإحسان ) ، لإبن حبان . ( ت : 354 ) – المكتبة التجارية – 1417 هـ .

27. صحيح صفة صلاة النبي ﷺ ، لحسن السقاف . في قيد الحية– دار الإمام النووي –1413 هـ .

28. صفة صلاة النبي ﷺ ، للألباني ( ت : 1420 )– اشاعت الإسلام الهند – 1403 هـ .

29. صلاة التّرويح ، للألباني ( ت : 1420 ) – مكتبة القرآن بباكستان– –.

30. فتح العزيز ( بالمجموع ) ، للرافعي ( ت : 623 ) – إدارة الطباعة المنيرية–

31. فتح المغيث ، للسخاوي ( ت : 902 ) – العلمية – 1422 هـ .

32. القاموس المحيط ، للفيروزآبادي ( ت : 817 ) – " – 1420 هـ .

33. قواعد في علوم الحديث ، للتهانوي . ( ت : 1394) – مكتب المطبوعات الإسلامية – 1404 هـ

34. الكاشف ، للذهبي ( ت : 748 ) – دار الفكر – 1418 هـ .

35. الكامل في الضعفاء ، لإبن علي ( ت : 365 ) – العلمية – 1418 هـ .

36. لسان العرب ، لإبن منظور ( ت : 711 ) – " – 1424 هـ .

37. لسان الميزان ، لإبن حجر ( ت : 852 ) – " –1416– هـ .

38. مجمع الزّوائد ، للهيثمي ( ت : 807 ) – " –1422– هـ .

39. المجموع ، للنووي . ( ت : 676 ) – " – 1423 هـ .

40. المستدرك ، للحاكم ( ت : 405 ) – " – 1411 هـ .

41. المسند ، للإمام أحمد . ( ت : 241 ) – مؤسسة الرسالة – 1419 هـ .

42. المصنّف ، لعبد الرزاق ( ت : 211 ) – العلمية – 1421 هـ .

43. المصنَّف ، لإبن أبي شيبة . ( ت : 235 ) – " – 1416 هـ .

44. المعجم الكبير ، للإمام الطبراني . ( ت : 360 ) – دار إحياء التراث العربي – 1422 هـ

45. معرفة السّنن والآثار ، للبيهقي . ( ت : " ) – العلمية –1422 هـ .

46. المغني في الضعفاء ، للذهبي . ( ت : 748 ) – " – 1418 هـ .

47. المنهاج ( شرح صحيح مسلم ) ، للنووي . ( ت : 676 ) – " – 1421 هـ .

48. النكت على كتاب ابن الصلاح ، لإبن حجر . ( ت : 852 ) – " – بدون التاريخ .

49. الوجيز ، للغزالي . ( ت : 505 ) – " – 1425 هـ .

50. இதுதான் சத்தியத்தின் தீர்வு வஹ்ஹாபிகளுக்கு ஒரு மறுப்பு. A.M.M. மௌலவி நஸீம். B.A. ( அஸ்ஹரீ ) (மரணம்:1998ம)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# فهرس


1. மதிப்புரை. ........................................................................ (3)
2. அணிந்துரை. ........................................................................ (5)
3. சிறப்புரை. ........................................................................ (8)
4. ஆசியுரை. ........................................................................ (12)
5. முன்னுரை. ........................................................................ (14)
6. யார் இந்த அஷ்ஷெய்க் நாஸிருத்தீன் அல்பானி? .................. (20)
7. ஆய்வு - (1) : ஸுஜூதிலிருந்து அல்லது இருப்பிலிருந்து எழும் முறைகளைக் கூறும் ஹதீஸ்கள். ........................................ (30)
8. மாலிகுப்னுல் ஹுவைரிஸ் (ரழி) அவர்களின் ஹதீஸ். ................ (31)
9. வாஇலுப்னு ஹுஜ்ர் (ரழி) அவர்களின் ஹதீஸ். ........................ (33)
10. அலிய்யுப்னு அபீதாலிப் (ரழி) அவர்களின் ஹதீஸ். .................. (37)
11. முஆதுப்னு ஜபல் (ரழி) அவர்களின் ஹதீஸ். ........................... (38)
12. ஷன்தம் (ரழி) அவர்களின் ஹதீஸ். .......................................... (39)
13. அபூஹுரைரா (ரழி) அவர்களின் ஹதீஸ். .................................... (40)
14. அப்துழ்ழாஹிப்னு உமர் (ரழி) அவர்களின் ஹதீஸ். .................... (41)
15. ஆய்வு -(2) : இச்சட்டப் பிரச்சினைக்குரிய ஹதீஸாகிய " ஹதீஸுல் அஜ்ன் " இன்னும் அதன் அறிவிப்பாளர் தொடர் பற்றிய ஆய்வும் (45)
16. இமாம் அபூ இஸ்ஹாக் அல் ஹர்பீ (ரஹ்) அவர்களின் ஆசிரியர் (48)
17. யூனுஸுப்னு புகைர் (ரஹ்) அல் கூபீ. ........................................ (49)
18. அல்பானியும் யூனுஸுப்னு புகைரும். ........................................ (51)
19. அல் ஹைஸமுப்னு இம்றான் அல் அபஸீ. .................................. (53)
20. அல்பானியும் அல்ஹைஸமுப்னு இம்றானும். ............................ (55)
21. இவ்வாறு அல்பானி கூறியது பலவிதத்திலும் தவறாகும். ......... (57)
22. அதிய்யதுப்னு கைஸ். ........................................................ (61)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. அல் அஸ்ரகுப்னு கைஸ். ........................................................ (62)
24. ஆய்வு - (3) : இந்த ஹதீஸின் தரம். ........................................ (63)
25. இமாம் இப்னுஸ்ஸலாஹ் رحمه الله அவர்களின் கூற்று. .................. (63)
26. இமாம் நவவீ رحمه الله அவர்களின் கூற்று. ................................. (64)
27. இமாம் ஹாபிழ் இப்னு ஹஜர் رحمه الله அவர்களின் கூற்று. ....... (65)
28. இமாம் அஸ்ஸபீதீ رحمه الله அவர்களின் கூற்று. ........................... (65)
29. அஷ்ஷெய்க் ஹஸனுப்னு அலிய்யிஸ்ஸக்காப் அவர்களின் கூற்று. (66)
30. ஒரு சந்தேகமும் அதற்குரிய பதில்களும் ................................ (71)
31. ஆய்வு - (4) : புகஹாக்களிடத்தில் "அல் அஜ்ன்" தோன்றிய வரலாறு. ........................................................................ (74)
32. ஆய்வு - (5) : அறபுப் பாஷையில் "அல் அஜ்ன்". ................ (77)
33. அறபுப்பாஷையில் "அல்ஆஜின்" யார்? ....................................... (79)
34. அறபுப்பாஷையில் "அல்அஜ்னின்" அமைப்பு. ............................ (83)
35. ஒரே பார்வையில் ......................................................................... (85)
36. முடிவுரை ..................................................................................... (87)
37. துணை நூற்கள். ........................................................................ (88)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

037, 2224247
2232565
2222007

0777
399
399

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிவரவிருக்கும் ஆசிரியரின் பிற நூற்கள்.....

### ஜும்ஆ நாளின் தனிச் சிறப்புக்கள்.

ஜும்ஆ நாள் பற்றி வந்துள்ள நூற்றுக்கு மேற்பட்டுள்ள சிறப்புக்கள் இந்நூலில் ஒன்று திரட்டப்பட்டுள்ளன.

### இமாம்களின் கருத்து வேற்றுமைக்குரிய காரணிகள்.

இமாம்களுக்கு மத்தியில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளின் தோற்றம் மற்றும் அதற்கான அடிப்படை காரணிகள் பற்றி இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளது.

### தஹ்கீகு இஸ்மி மலகில் மௌத்.

உயிர்களுக்கு பொறுப்பான வானவர் மலகுல் மௌத் அவர்களுக்கு பரவலாக வழங்கப்பட்டு வரும் (இஸ்ராஈல்) என்ற பெயர் ஹதீஸ் மற்றும் இமதம்களின் கருத்துக்கள் மூலம் இந்நூலில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org